31 °C/°F
தெளிவான வானம்


# உதயன்

சுடர் 30 கதிர் 264 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 1, திங்கட்கிழமை 17.08.2015

# அச்சமின்றி வாக்கிடுக

## தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை

- வன்முறையில் ஈடுபடுவோருக்கு தலையில் சூடு.
- சட்டத்தை மீறுவோருக்கு பிணை இல்லை.
- விதி மீறிய வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை.
- பொலிஸ் நிலையங்களில் விசேட பதிவேடு.



கொழும்பு, ஒகஸ்ட் 17
வாக்களிப்பது மக்களின் உரிமையாகும். வாக்களிப் பதைத் தவிர்க்காமல் வாக்களிப்பு நிலையத்துக்கு அச்சமின்றிச் சென்று வாக்களியுங்கள்.- இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சகல வாக்காளர்க ளிடமும் கேட்டுக்கொண்டுள்ளார். வாக்கெண்ணும் நிலையங்களில் வன்முறையில் ஈடுபடுபவர்களின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்துமாறும் தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பக்கம் 21.....

## நேரத்தோடு சென்று வாக்களிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக.17
வாக்குரிமை உள்ள ஒவ்வொருவரும் இன்று நேரத்துடன் தமது வாக்களிப்பை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன்.
நாடாளுமன்றத் தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது.

பக்கம் 21.....

## நள்ளிரவுக்கு முன்னர் முதலாவது முடிவு

கொழும்பு, ஒக.17
"முதலாவது தேர்தல் முடிவு இன்று நள்ளிரவுக்கு முன்னர் வெளியாகும்" - எனத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தேர்தலின் தொகுதி மட்டத்திலான முடிவுகள் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இன்று பிற்பகல் 4 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் தபால் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். இந்த வாக்குகள் எண்ணப்பட்டதையடுத்து, முடிவுகள் அறிவிக்கப்படும்.

பக்கம் 21.....

## முதன் முறையாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் கண்காணிப்பில்

கொழும்பு, ஒக. 17
இலங்கையில் முதல் முறையாக நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணியில், கொழும்பைத் தளமாக கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஈடுபடவுள்ளனர்.
இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ள, சுமார் 180 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து, கொழும்பிலுள்ள 20இற்கும் அதிகமான வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளனர்.
ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளே இந்த கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். பிரித்தானியா,

பக்கம் 21.....

## லஞ்சமாக கொடுக்கப்பட இருந்த பொருள்கள் யாழில் சிக்கின

யாழ்ப்பாணம், ஒக.17
வாக்காளர்களுக்கு லஞ்சமாக, தேசியக் கட்சி ஒன்றின் யாழ். மாவட்ட அமைப்பாளரால் வழங்கப்படவிருந்த பெருமளவான பொருள்கள் அளவெட்டியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்திலும் தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளரினால் முன்னெடுக்கப்பட்ட அரிசி விநியோகமும் தேர்தல்கள்

பக்கம் 21.....

## வேட்பாளர்களின் செலவு விவரம் தேர்தலின் பின்னர்

கொழும்பு, ஒக.17
நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்பாளர்கள் எவ்வளவு செலவு செய்துள்ளனர் என்பது குறித்த அறிக்கையொன்று, தேர்தலின் பின்னர் வெளியிடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காக வேட்பாளர்கள் எவ்வளவு செலவு செய்தார்கள் என்பது குறித்து, தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி இவ்வறிக்கை வெளியிடப்படவுள்ளது.
சில வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைக்காக 200 முதல் 400 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்நிலையில், பரப்புரைக்கு செலவாகும் மொத்தத் தொகையானது, நினைத்ததைவிட பலமடங்கு அதிகமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-சி)

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப் பெட்டிகள் விநியோகம்



யாழ்ப்பாணம், ஒக.17
நாடுமுழுவதுமுள்ள 12 ஆயிரத்து 314 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் அனைத்தும் நேற்றுக் காலை முதல் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் கொண்டு செல்லப்பட்டன. பொலிஸ் பாதுகாப்பு வாகனங்களுக்கு மத்தியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் நாடு முழுவதும் வாக்குப்பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பக்கம் 21.....

# வாக்களிப்பு இன்று

கொழும்பு, ஒக.17
"இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுத் தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7 மணி முதல் பி.ப. 4 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் வாக்காளர்கள் அனைவரும் தமது ஜனநாயகக் கடமையான வாக்களிப்பை நிறைவேற்ற வேண்டும்" - என்று தேர்தல்கள் ஆணையகம், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் என்பன பொதுமக்களை வலியுறுத்தியுள்ளன.

பக்கம் 21.....

கன்னியத்தை சிதைக்கும் போதைப் பொருள் புழக்கம் பக். 16

## மீசாலையில் கோர விபத்து: இருவர் சாவு; ஐவர் காயம்



தென்மராட்சி, ஒக.17
சாரதி தூங்கியதால் வாகனம் வீதியை விட்டு விலகி மறு பக்கத்தில் உள்ள மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த இருவர் உயிரிழந்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட வாகனத்தில் பயணித்த ஐவர் காயமடைந்தனர். இந்தச்

பக்கம் 21.....

## புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதிப் போரில் தப்பிச் சென்றார்

### சிங்கள நூலில் தகவல்

கொழும்பு, ஒக. 17
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இறுதிப் போரிலிருந்து தப்பிச் சென்றதாகக் கூறும் வகையிலான சிங்கள நூல் ஒன்று அச்சிடப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை

பக்கம் 21.....

## விதிகள் மீறப்பட்டால் கடும் நடவடிக்கை

### பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக.17
இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது இடம்பெறும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், தேர்தல் முடி

பக்கம் 21.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அனுர, சுசில் நீக்கத்துக்கு மறைமுக சதியே காரணம்

## கொழும்பு தகவல்கள் கூறுகின்றன

கொழும்பு, ஓக. 17

நீண்டகாலமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஏமாற்றி, பொய் கூறி, கட்சிக்கும் தலைவருக்கும் பல துரோக செயல்களை செய்ததன் காரண மாகவே சுசில் பிரேமஜயந்த மற் றும் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் கட்சியின் பதவிகளில் இருந்தும் உறுப்புரிமையில் இருந்தும் ஜனாதிபதியால் நீக்கப்பட்டனர் என்று கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக் கின்றன.

சுசில் பிரேமஜயந்த மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர், மஹிந்தவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்க்க தலையிடுவதாக கூறி, ராஜபக்ஷவுக்கு சார்பாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளதுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையான பெயரில் கட்சி ஒன்றை பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விமல் கீகனலே என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறிலங்கா ஜாதிக பெரமுன என்ற கட்சியை 50 லட்சம் ரூபா கொடுத்து கொள்வனவு செய்து அந்த கட்சியின் பெயரை சிறிலங்கா சுதந்திர முன்னணி என பெயர் மாற்றம் செய்து சின்னமாக பூச்சாடியையும் பெற்றுள்ளனர்.

சுசில், அனுர ஆகியோர் இதனை முன்னின்று மேற்கொண்டுள்ளதுடன் கட்சியை கொள்வனவு செய்வதற்கான பணத்தை மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணையான பெயரை கொண்ட சிறிலங்கா சுதந்திர முன்னணி என்ற பெயரை இரகசியமான முறையில் பெற்றுக்கொண்டமை சுதந்திரக் கட்சிக்கு செய்யும் துரோகமும், மோசடியுமாகும். கட்சி என்பதற்கு பதிலாக முன்னணி என்று மட்டும் இவர்கள் புதிய கட்சியின் பெயரில் மாற்றம் செய்துள்ளனர். இதனை பதிவு செய்ய தேர்தல் ஆணையாளரின் அனுமதியை பெறுவதும் சிரமமானது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் பெயருக்கு இணையான பெயரை கொண்டதும் மக்களை குழப்பும் வகையிலுமான பெயரை எவருக்கும் வழங்க முடியாது. எவ்வாறாயினும் இது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் கலந்துரையாடல்களை மேற்கொள்ளாது, விமல் கீகனகேவிடம் கட்சியை கொள்வனவு செய்து ஆறு நாள் களுக்குள் சகார என்பவரை கட்சி யின் தலைவராகவும் நியமித்துள் ளனர்.

சுசில் பிரேமஜயந்தவும் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் இது குறித்து ஜனாதிபதி மாத்திரமல்ல தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கவில்லை. எவ்வாறாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த விடயம் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது. இதனையடுத்தே சுசில் மற்றும் அனுர ஆகியோரை ஜனாதிபதி பதவிகளில் இருந்தும் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கியுள்ளதாக கூறப்படுகிறது.(ற-ரி)

# குறுந்தகவல் ஊடாக 50 முறைப்பாடுகள்

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் குறுந்தகவல்களினூடாக தேர்தல்கள் ஆணையாளருக்கு 50 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு மாத்திரம் 36 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

சட்டவிரோதமாக தேர்தல் பரப்புரை சுவரொட்டிகள் மற்றும் கட்டவுட்கள் காட்சிப் படுத்தியுள்ளமை தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே பொதுத் தேர்தல் குறித்து ஆயிரத்து 572 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறன முறைப்பாடுகளில் 322 முறைப்பாடுகள் சட்டவிரோதமாக தேர்தல் பரப்புரை சுவரொட்டிகள் மற்றும் கட்டவுட்கள் காட்சிப் படுத்தியுள்ளமை தொடர்பில் பதிவாகியுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 356 முறைப்பாடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 105 முறைப்பாடுகளும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 72 முறைப்பாடுகளும், குருநாகல் மாவட்டத்தில் 96 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

மேலும் தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 808 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 13 வேட்பாளர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களை கைதுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டகளைக் கைதுசெய்வதற்கான 278 சுற்றிவளைப்புகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சுற்றிவளைப்புகள் மூலம் 642 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மீண்டும் தோண்டியெடுக்கும் நோக்கிலேயே புதைத்தோம்

## தாஜுதீனின் உறவினர்கள் தெரிவிப்பு

கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் சடலத்தை மீண்டும் தோண்டியெடுக்கும் நோக்கிலேயே நல்லடக்கம் செய்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தாஜுதீனின் குடும்பத்தினரை மேற்கோள் காட்டி கொழும்பு செய்திச் சேவை ஒன்று விசேடசெய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

வசீம் தாஜுதீனின் சடலம் இஸ்லாமிய வழக்கத்துக்கு மாறாக பொலித்தீனால் சுற்றப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக தற்போதைக்கு அவரது சடலம் மீள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் செயற்பாடு இலகுவாக்கப்பட்டுள்ளது.

தாஜுதீனின் சடலத்தை அவ்வாறு பொலித்தீனில் சுற்றி நல்லடக்கம் செய்யும் நடவடிக்கை அவரது தாய் மாமன் பயாஸ் லத்தீபின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனது சகோதரி மகன் மரணத்தில் மர்மம் இருப்பதாக பலமான சந்தேகம் கொண்டிருந்த அவர், வழக்கத்துக்கு மாறான முறையில் வெள்ளை பொலித்தீன் உறையில் சுற்றிய பின்னரே இஸ்லாமியர்களின் வழக்கத்தின்படி சடலத்தை வெள்ளை துணியால் சுற்றியுள்ளார்.

என்றைக்காவது ஒரு நாள் தனது மருமகனின் சாவு தொடர்பான மர்மங்கள் விலகி, தமது குடும்பத்தினருக்கு நியாயம் கிட்டும் என்று தாம் உறுதியாக நம்பியதாக தெரிவித்துள்ள அவர், தற்போது அதற்கான காலம் கனிந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.(ற)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

கொழும்பு, ஓக.17

வவுனியா பூந்தோட்டம் சாந்த சோலை செல்லும் வீதியில் கராஜ் ஒன்றின் உரிமையாளர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இரு பிள்ளைகளின் தந்தையான ரவிச்சந்திரன் (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை தனது வியாபார நிலையத்தைத் திறந்து பணிகளைச் செய்ய ஆயத்தமானபோதே மின்சாரம் ஒழுக்கு ஏற்பட்டு மின்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# முக்கியஸ்தர்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

## புலனாய்வு பிரிவினரின் தகவல்களையடுத்து

கொழும்பு, ஓக.17

புலனாய்வு பிரிவினரின் தகவல்களையடுத்து, அரசியல் முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டமை, பிரதமர் பதவி தொடர்பான ஜனாதிபதி மைத்திரியின் முடிவு ஆகியவற்றையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை கருத்திற் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக தேர்தல் முடிவுகள் வெளியாகியதன் பின்னர் வன் முறைகள் வெடிக்கலாமென புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் அரசியல் முக்கியஸ்தர்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் அவர்கள் வாக்களிக்கச் செல்லும் நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளின் பாதுகாப்பு வழமையை விட அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ற)

## கட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



வவுனியா, ஓக.17

வவுனியா பூவரசங்குளம் வேலன்குளம் பகுதியில் வேட்டைக்குப் பயன் படுத்தும் கட்டுத் துப்பாக்கியுடன் வேட்டைக்குச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதாக பூவ ரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பூவரசங்குளம் பொலிசாரிற்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வேட்டைக்காக சென்றவரை பின் தொடர்ந்து அவரைக் கைது செய்ததுடன், துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஓக.17

வவுனியாவில், மீள்குடியேற்ற கிராமமான ஈஸ்வரிபுரத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான விழிப்புணர்வு பிரச்சாரம் ஒன்று கடந்த வாரம் முன்னெடுக்கப் பட்டது. இந்த நிகழ்வு சமூக விழிப்புணர்ச்சிக்கான மக்கள் அமைப்பின் வவுனியா மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்வி எஸ். வதனியால் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மைக்காலத்தில் எமது நாட்டில் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன். கிராமங்களில் சிறுவர்களை துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பதற்காகவும் சிறுவர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் தொடர்பான விளக்கமளிப்பதற்காகவே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. ஈஸ்வரி புரம் கிராமத்தில் மாத்திரமல்லாது ஏனைய கிராமங்களிலும் சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.- என்று தெரிவிதார்.



இந்த நிகழ்வில் 40 க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பான மேலதிக விளக்கங்கள் வழங்கப்பட்டன. (ற)

## விபத்து ஏற்படுத்தியவரை இழப்பீடு வழங்குமாறு உத்தரவு

தென்மராட்சி, ஓக.17

பாதசாரிகள் கடவையில் கடந்த பொலிஸ் உத்தியோகத்தரை மோதி காயத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி இழப்பீடாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் நுணாவில் சந்திக்கு அருகில் பாதசாரிகள் கடவையில் நடந்து சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை வேகமாக வந்த டிமோ ரக ஜீப் வண்டி மோதி காயத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையில் வாகனச் சாரதிக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து இழப்பீடு தொடர்பான அறிக்கை கிடைத்ததும் உத்தரவிடப் படுமென தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட வருக்கு ஏற்பட்ட இழப்பீடாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப் பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நாடாளுமன்றத்துக்கு பெரும் பொறுப்பு உள்ளது

## தகுதியானவர்களைத் தெரிவுசெய்யுங்கள் என வாக்காளர்களிடம் சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, ஓக.17
19ஆவது திருத்தச்சட்டத்தை செயற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்திற்கு இருப்பதாக நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளரும் கோட்டே நாகவிகாராதிபதியுமான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.



நேற்று ஞாயிற்றுக்கிழமை தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவைச் சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அவர் தொடர்ந்தும் கூறுகையில்,
"கடந்த தேர்தல்களுடன் இந்தத் தேர்தலை ஒப்பிட்டுப் பார்க்கை யில் ஒரு வித்தியாசத்தைக் காணக்கூடியதாக உள்ளது. குழப்பங்கள், சட்டவிரோதச் செயற்பாடுகள், மனித படுகொலைகள், தாக்குதல்கள் என்பன குறைந்துள்ளன. எனவே, இதனை வரலாற்று ரீதியில் ஒரு சிறப்பான ஆரம்பமாக நாம் பார்க்கிறோம்.
இது நூற்றுக்கு நூறு வீதம் சரியென்று நாங்கள் உறுதி வழங்கவில்லை. தேர்தலை நீதியான முறையில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் எடுத்திருக்கும் முயற்சிகளைப் பாராட்டுவதோடு, இதற்குப் பின்னரும் கட்சி பேதங் களை மறந்து நீதியை நிலைநாட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதே எமது கோரிக்கை. எங்களுக்குத் தேவை சாதாரண வன்முறைகளற்ற ஒரு தேர்தல்.
நாடாளுமன்றம் என்பது நாட்டுக்கு சட்டத்தை – நீதியை உருவாக்கும் மிக உயர்ந்த இடம். சட்டங்கள் இயற்றப்படும் இடம். எனவே, அந்த விடயங்களைச் சிறப்பாகக் கையாளக்கூடியவர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். சாதி, மத, குல, கட்சி பேதம் மறந்து, நன்கு கல்வி அறிவுடைய – நல்ல சிந்தனை கொண்ட – நற்பெயர் உடைய – ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாத ஒருவரை அந்த உயர்ந்த இடத்திற்கு நியமிக்குமாறு வாக்காளர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.
புதிய நாடாளுமன்றத்திற்கு அதிக மக்கள் சேவைகள் செய்யவேண்டிய பொறுப்பு உள்ளது. 19ஆவது திருத்தச்சட்டத்தை சரியாகச் செயற்படுத்துதல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை ஏற்படுத்துதல் போன்ற நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவை புதிய நாடாளுமன்றுக்கு இருக்கிறது" – எனக் குறிப்பிட்டுள்ளார். (ற–சி)

## திருநெல்வேலியில் நேற்றிரவு பஸ் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணத்திற்கும் அம்பாறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மீது இனம் தெரியாத நபர்கள் கல் வீசி தாக்குதல் மேற்கொண்டனர்.
பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் நேற்றிரவு 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்களே பஸ் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளதாக தாக்குதலுக்கு இலக்கான பஸ் சாரதி விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.
அம்பாறையில் இருந்து பயணிகளை ஏற்றி வந்த குறித்த பஸ், யாழ். நகரப் பகுதியில் பயணிகளை இறக்கிவிட்டு தரிப்பிடத்திற்காக பலாலி வீதியின் ஊடாக கோண்டாவில் டிப்போவுக்கு சென்று கொண்டிருந்த வேளையிலையே கல்வீச்சு இடம் பெற்றுள்ளது.
குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ற)

## குருநாகலில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஓக.17
இம் முறை நாடாளுமன்ற தேர்தலில் குருணாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு முன்பாகக் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.
அநுராதபுரம் – குருணாகல் பிரதான வீதியில் கல்கமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வேட்பாளரின் வீட்டுக்கு முன்னால் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.
கல்கமுவ பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கமைய குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தேர்தல் விதி மீறல்: 833 பேர் கைது

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணி வரையில் தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 833 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்களில் 642 பேர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட 278 சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கைது செய்யப்பட்டவர்களில் 166 பேர் காவல்துறையினருக்கு கிடைத்த 362 முறைப்பாட்டுக்கமைய கைது செய்யப்பட்டவர்களாவர்.
அதேவேளை, கடந்த 14ஆம் திகதி இரவு 12 மணியில் இருந்து இது வரையிலான காலப் பகுதியினுள் 25 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



இந்தியாவின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் எ.நடராஜனின் வாசஸ்தலத்தில் கடந்த சனிக்கிழமை சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன. (ற–20)

## மத்தள விமான நிலையத்தை பார்வையிட்டனர் அதிகாரிகள்

மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட மத்தள விமான நிலையத்தில் உள்ள களஞ்சியசாலையைப் பார்வையிடுவதற்காக கடந்த வியாழக்கிழமை நெல் சந்தைப் படுத்தும் சபையின் அதிகாரிகள் அங்கு சென்றுள்ளனர்.
மத்தள விமான நிலையத்துக்கு பயணிகள் விமானங்கள் செல்லாததன் காரணமாக அந்த நிலையத்தின் களஞ்சியத்தை எதிர்வரும் பெரும்போக நெல் அறுவடையின் போது பெறப்படும் நெல்லை களஞ்சியப்படுத்த சபையின் அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்தநிலையில் அங்கு சென்று பார்வையிட்ட நெல்சந்தைப்படுத்தும் சபையின் அதிகாரிகள், தற்போது குறித்த களஞ்சியத்தை பெற்றுக்கொள்வதற்க்க உள்ளூர் விமான சேவைகள் நிறுவனத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## வீட்டில் மகன் மின் தாக்கி இறந்ததை 3 நாள்களாக அறியாத பெற்றோர்

### திருநெல்வேலியில் துயரம்

யாழ்ப்பாணம், ஓக. 17
மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் சிறைச்சாலை உத்தி யோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.
திருநெல்வேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வன் (வயது 32) என்ற சிறைச்சாலை உத்தியோகத்தரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது–
குறித்த நபர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு தனது வீட்டில் மின்சார வேலை செய்து கொண்டிருந்துள்ளார். அதன்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இதை அவரது வாய்பேச முடியாத பெற்றோர்கள் அறியவில்லை. கலைச்செல்வன் [illegible] புணிபுரிகின்றார். கலைச் செல்வனின் மோட்டார் சைக்கிள் வீட்டில் இருந்த போதும் பெற்றோர் மகன் பணிக்காக அனுராதபுரம் சென்றுவிட்டார் என்று நினைத்து வளாவிருந்துள்ளனர்.
இவ்வாறு மூன்று நாள்கள் கழிய துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. அயல் வீட்டுக்காரர் துர்நாற்றத்துக்கான காரணத்தைத் தேடிய போது கலைச்செல்வன் வீட்டு அறைக்குள் விழுந்து கிடப்பதை ஜன்னல் ஊடாகக் கண்டுள்ளனர். அதன் பின்னரே பெற்றோர்கள் மகன் சாவடைந்ததைப் பெற்றோர் அறிந்துள்ளனர். சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் சென்று பார்வையிட்டதுடன், சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலை [illegible] ஒப்படைத்துள்ளனர். (ற–106)

தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
கொடியேற்றம்
இன்று (17.08.2015) திங்கட்கிழமை



இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.
அனுசரணை: பொ. விக்கினேஸ்வரன் (வாசன்)
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்காதவர்களுக்கு தண்டனை வழங்கும் நடைமுறை வேண்டும்

## மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை

வாக்களிக்காதவர்களுக்கு தண்டனை வழங்கும் நடைமுறையைக் கொண்டுவந்தால் வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்கலாமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட் தெரிவித்துள்ளார்.
கடந்தகால புள்ளிவிபரங்களின் அடிப்படையில், சுமார் 30 –40 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பை தவிர்த்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், வரலாற்றில் அதிகமாக வாக்களிக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் சுமார் 28 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தவறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.
இந்நிலையில், அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்பற்றுவதைப் போன்று, இலங்கையிலும் தண்டனை முறையொன்று கொண்டுவரப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.
குறிப்பாக ஆடம்பர வசதிகளுடன் வாழ்பவர்கள் மற்றும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்பவர்களே, தொடர்ந்து வாக்களிப்பை தவிர்த்து வருவதாக, அண்மையில் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஓக. 17
இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்டு செல்ல முயற்சித்த இருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 7.8 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். சம்பவத்தில் 26 வயது மற்றும் 59 வயதுடைய இரு சீன பிரஜைகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## மைத்திரியின் ஆலோசகராகிறார் முன்னாள் கடற்படை தளபதி

கொழும்பு, ஓக. 17
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகராக, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த தகவலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.
ஜனாதிபதியின் கடல்சார் விவகாரங்களுக்கான ஆலோசகராக அட்மிரல் ஜெயந்த பெரேரா பணியாற்றுவார் என்றும் இவரது நியமனம், கடந்த 13ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ற)

### நாளை

**ஆவணி-01**
**செவ்வாய்கிழமை**
**18.08.2015**
**திதி: சதுர்த்தி**
**பி.இ. 04.14 வரை**
**நட்சத்திரம்: உத்தரம்**
**மு.ப.09.53 வரை**
**சுபநேரம்:**
**10.35-12.05 வரை**
**இராகுகாலம்:**
**03.05-04.35 வரை**

## இலங்கை புகலிடக்காரர்களை நாட்டுக்கு திருப்ப வேண்டும்

### சுவிஸ் அரசியல்வாதி கோரிக்கை

சுவிட்ஸர்லாந்தில் அடைக்கலம் கோரியுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று அந்த நாட்டின் முக்கிய அரசியல்வாதி கோரிக்கை விடுத்துள்ளார்.
இலங்கையில் அமைதி நிலவுவதாக சுட்டிக்காட்டியே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.
நாட்டில் இருந்து தப்பிவந்தவர்களுக்கு சுவிட்ஸர்லாந்து தற்காலிக புகலிடம் வழங்கியது. எனவே அவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு செல்வது தொடர்பில் மீள சிந்திக்க வேண்டும் என்று சுவிட்ஸர்லாந்தின் வலதுசாரி எப்டிபியின் தலைவர் பிலிப் மியூலெர் கேட்டுள்ளார்.
போரினால் மக்கள் இடம்பெயர்ந்த போதும் நாட்டில் இயல்புநிலை ஏற்பட்ட பின்னர் அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதே முக்கியமானதாகும். இந்நிலையில் பொருளாதாரத்தை கருத்திற்கொண்டு ஒரு நாட்டுக்குள் வருவது நிராகரிக்கப்பட வேண்டும் என்று மியூ லெர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இலங்கையில் 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப்போர் நிறைவடைந்ததாக அவர் நினைவுபடுத்தியுள் ளார். (ற)

## தேசியப் பட்டியல் விவகாரத்தில் நீதிமன்றை நாடுவார் மஹிந்த

கொழும்பு, ஓக. 17
நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர், தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னதாக, அதற்கு அனுமதி கோரி தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நீதிமன்ற உத்தரவு ஒன்றை நாடக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் பதவியில் இருந்து அனுர பிரியதர்சன யாப்பாவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜெயந்தவும், நீக்கப்பட்டதன் சட்டபூர்வதன்மை குறித்து கருத்து வெளியிட, தேர்தல்கள் ஆணையாளர் மறுத்துள்ளார்.
இந்த விவகாரத்தில் எந்தக் கருத்தையும் வெளியிட வேண்டிய தேவை இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளது இன்று நடைபெறவிருக்கும் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும், தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களாக, தினேஸ் குணவர்த்தன மற்றும் டலஸ் அழகப்பெருமவிடமே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலராக இருந்த போது சுசில் பிரேமஜயந்த தேர்தல் திணைக்களத்திடம் கையளித்த, வாக்களிப்பு நிலைய முகவர்கள், வாக்கெண்ணும் நிலைய முகவர் களின் பட்டியல் செல்லு படியாகும் என்றும் அவர் உறுதியளித் துள்ளார். (ற)

## தேசிய அரசு அமைப்பதே ஜனாதிபதியின் திட்டம்

### சர்வதேசத்தின் நகர்வும் அதுவே என்கிறார்கள் இராஜதந்திரிகள்

கொழும்பு, ஓக. 17
இன்று நடைபெறும் எட்டாவது நாடாளுமன்ற தேர்தல் முக்கியமாக கருதப்படுவதாக கொழும்பு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். தேசிய அரசு ஒன்றை அமைப்பதனையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
அத்துடன் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட இலங்கை மீது செல்வாக்கு செலுத்தும் நாடுகளின் எதிர்பார்ப்பும் தேசிய அரசு அமைவதே எனவும் இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
இது தொடர்பில் தெரியவருவதாவது–
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் தமக்கே வெற்றி என்று கூறி வருகின்றன. எனினும் எந்தக் கட்சிக்கும் தனித்த பெரும்பான்மை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.
ஐக்கிய தேசிய முன்னணி கூடியது 105 ஆசனங்களைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினர் 110 ஆசனங்களை தாம் பெறுவோம் என்று கூறியுள்ளனர்.
எனினும் ஜனாதிபதி, கடந்த மூன்று நாள்களில் நேரடியான அரசியல் நடவடிக்கைகள், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஆட்சியை ஏற்படுத்தாது என்றே நம்பப்படுகிறது. ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசிய பட்டியலில் தமக்கேற்றவாறு உறுப்பினர்களை பெயரிடும் வகையில் தமது கட்சித் தலைமை அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

> **“அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட இலங்கை மீது செல்வாக்கு செலுத்தும் நாடுகளின் எதிர்பார்ப்பும் தேசிய அரசு அமைவதே எனவும் இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.**

இந்தநிலையில் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்கள், தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆசனங்கள், சரத் பொன்சேகாவின் ஆசனங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினரின் ஆதரவையும் கொண்டு பெரும்பாலும் தேசிய அரசு ஒன்றே அமைக்கப்படும் வாய்ப்புக்கள் தெளிவாகியுள்ளன.
இது ஜனாதிபதி விரும்புகிறாரோ இல்லையோ, சர்வதேசம் விரும்பும் ஒரு நகர்வு என்பது தெளிவு. இதில் இந்தியாவும் அமெரிக்காவும் முக்கியமான தீர்மானிக்கும் சக்திகள் என்பதில் ஐயமில்லை என இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ற)

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 3 | 5 | 1 | | | |
| 6 | | | | | | 2 | | |
| | | | | | | | | 7 |
| | 9 | 5 | 8 | | | | | |
| | | 6 | | | | 5 | | 1 |
| | | 1 | 7 | 9 | | | | |
| | | | | | 2 | | | 5 |
| | | | | 7 | | 6 | | 3 |
| | | | | 4 | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 6 | 8 |
| 6 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 7 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர் ஒத்துழைப்பர். அத்தியாவசியச் செலவுக்கு கடன் வாங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். சீரான ஓய்வு உடல் நலம் காக்கும்.

**இடபம்:** வாழ்வில் புதிய அனுபவத்தைப் பெறுவீர்கள். எதிரிகளின் தொல்லை மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தாராள இலாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** யாரிடமும் சொந்த விடயம் பேசுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். எதிர்பார்த்த சுபசெய்தி உங்களைத் தேடி வரும். ஆடம்பரப் பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் வருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்வீர்கள். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவை. மனைவியின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கும்.

**துலாம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** பொது விடயங்களில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். விழா, விருந்து எனச் சென்று மகிழ்வீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணவரவு கூடும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு உண்டாகும். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**கும்பம்:** எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். சொத்து, முக்கிய ஆவணம் ஆகியவற்றை பிறர் பொறுப்பில் தரக் கூடாது. பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

**மீனம்:** நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ்வீர்கள். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேர்க்கை உண்டாகும்.





இதுதான் கட்ட வண்டி.....!!!



## மீன்கொத்தியை வேட்டையாடிய பாம்பு

மரத்தின் உச்சியில் இருந்து கொண்டால், உயிருக்கு ஆபத்து நேர வாய்ப்பில்லை என்ற நம்பிக்கையுடன் ஒரு மீன்கொத்திப் பறவை உச்சிக் கிளையில் நின்று கொண்டிருந்தது. எமன் வரும் நேரம் யாருக்குத் தெரியும்? அதே மரத்தில் ஒளிந்து மறைந்து ஏறிக் கொண்டிருந்த பாம்பு அந்தப் பறவையின் தலையை அப்படியே கௌவிக்கொண்டது. தலைகீழாகத் தொங்கிய அந்தப் பாம்பு தனது தாடை எலும்புகளால் மீன்கொத்தியின் தலையை முழுமையாக கௌவிக்கொண்டு அது உயிரிழக்கும் வரைக்கும் காத்திருந்து, முழுமையாக உண்டது. மீன்கொத்தியைப் புவி ஈர்ப்பு விசையாலும் காக்க முடியவில்லை. பாவம்!
போத்ஸ்வானா நாட்டின் ஒகாவேங்கோ டெல்டா வனப்பகுதியில் நடந்த இந்தச் சம்பவத்தை தேவன் ஜென்கின் என்ற புகைப்படக் கலைஞர் உற்று நோக்கியதற்கு பரிசாக கிடைத்த அருமையான புகைப்படங்கள்.

## பாகுபலி ஸ்டைலில் தனுஷ் படம்

தனுஷ் மாஸ், கிளாஸ் என இரண்டு வகையான படங்களிலும் நடித்து வருகிறார். வேலையில்லாப் பட்டதாரி, மாரி என தொடர்ந்து மாஸ் படங்களைக் கொடுத்து வந்த தனுஷ் அடுத்து வெற்றிமாறனுடன் இணைந்து கிளாஸ் வகைப் படம் ஒன்றைக் கொடுக்கவுள்ளார். இந்தப் படத்துக்கு வடசென்னை என்று பெயரிடப்பட்டுள்ளது. அண்மையில் வெளிவந்த பாகுபலி திரைப்படம் முதல் பாகம் எடுக்கும் போதே, இரண்டாம் பாகத்தையும் 50 வீதத்துக்கும் மேல் முடித்து விட்டனர். இதேபோன்று விஸ்வரூபம் படமும் எடுக்கப்பட்டது. தற்போது வடசென்னை படத்தை வெற்றிமாறன் இரண்டு பாகமாக எடுக்கவுள்ளாராம். இரண்டாம் பாகத்தை எடுத்து முடித்த பின்னர் தான் படத்தை வெளியீடு செய்வதாக உள்ளார்களாம்.




## முல்லாவின் சட்டை

ஒருநாள் முல்லா அவரது வீட்டு மாடியில் நடந்துகொண்டு இருந்தபோது கால் தடுமாறிக் கீழே விழுந்துவிட்டார். "பொத்" என்று சத்தம் கேட்டதும் கீழே இருந்த அவருடைய மனைவி பயந்து போய்விட்டார். உடனே "என்னங்க! அங்க என்ன சத்தம்?" என்று கேட்டார்.
உடனே முல்லா "ஒன்றுமில்லை என் சட்டை கீழே விழுந்து விட்டது" என்றார்.
"என்னது... சட்டை விழுந்ததற்கா இவ்வளவு பெரிய சத்தம் கேட்டது?"
"இல்லை... இல்லை... சட்டைக்குள் நான் இருந்ததால் இவ்வளவு சத்தம்" என்றார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்




**J - என்றாலே ஜெயம் தான்**

சிறந்த நிர்வாகத் திறமை, நல்ல எண்ணம், எதிரிகளைப் பந்தாடும் குணம், எதிலும் நிமிர்ந்து நிற்கும் தன்மை, யாருக்கும் அஞ்சாத குணம், பின்வாங்காத தீரம், கடமை, கண்ணியத்துடன் செய்யும் பக்குவம் ஆகிய பண்பு களுக்கு சொந்தக்காரர்கள் J யில் பெயர் தொடங்குபவர்கள்.

கணினி போன்ற நுண்ணிய துறைகளில் அறிவு அதிகம். எதையும் இலக்கு வைத்து அடைவதில் விடாமுயற்சி உடையவர்கள். சுய கௌரவத்துக்காக எதையும் தாங்கும் இதயம் உடைய இவர்களது எழுத்தில் சூரியக்கதிர்கள் பட்டு, இடப்புறம் அதிகமாக சிதறுவதால், மனதில் போட்ட திட்டங்கள், முடியும் நேரத்தில் மனநெருடலைத் தருவதாக இருக்கும்.

மகிமை பொருந்திய பூமியின் மேல் உள்ள கடல்நீர் மற்ற கிரகங்களின் மேல் ஊற்றிக் கொள்ளாமல் இருப்பதற்கு, பூமியின் ஆகர்ஷண சக்தியே காரணம் ஆகும். அதுபோல் இவர்கள் மேல் பற்று வைத்தவர்கள் வேறு யார் பக்கமும் சாயமாட்டார்கள். எதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் பக்குவம் இவர்களை மாபெரும் ஆற்றல் மிகுந்தவர்களாக வெளிப்படுத்தும்.



தவறு செய்தவர்களைக் கண்டிப்பதில் யானையைப் போன்றவர்கள். சிறப்பான வாழ்க்கை, கம்பீரம், சுதந்திரத்தன்மை போன்றவற்றை அடி பிறழாமல் காப்பாற்றுவார். அரச பதவிகளும், அரசியல் பதவிகளும் விடாமல் துரத்தி வந்து இவர்களை அலங்கரிக்கும். பிறர் செய்தது தவறு என்று தெரிந்து விட்டால் போதும். தண்டனையை உடனே நிறைவேற்றி விடுவர்.

தவறு செய்தவர்கள் இவர்களுக்குக் கட்டுப்பட்டு நீங்கள்தான் எனது தெய்வம், மன்னித்து என்னை நல்வழிப்படுத்துங்கள் என்றால் போது குழந்தையாகிவிடுவர். எதிரிகள் இந்தக் குணாதிசயத்தை பயன்படுத்தி இவர்களை மாட்டிவிட வாய்ப்புண்டு. கவனம், நுண்ணிய அறிவு படைத்த இவர்கள், அரிதான விடயங்களை மிக எளிதாகப் புரிந்து கொள்வர். யூக அடிப்படையிலான சோதிடம், சாஸ்திரம், வானவியல், மருத்துவம் போன்ற துறைகளில் ஈடுபட்டால் பெரும் பணமும், புகழும் அடைவர். பேச்சுத் திறமை, எழுத்தாற்றல் மிக்கவர்களின் நட்பைப் பயன்படுத்தி தலைவர்கள் ஆகிவிடுவர்.

வியாபாரத்தில் உள்ளவர்கள் நேர்மையாளர்களாக இருப்பர். இதனால் வாடிக்கையாளர்களை அதிகமாகக் கவர்ந்து, கோடிகளை அடைந்து உச்சத்தில் இருப்பர்.

வாழ்வில் முதல் பகுதியில் நினைத்துப் பாராத அளவுக்குப் புகழ் அடைவர். பிற்பகுதியில் பணம் குவியும். பொதுக் காரியங்களில் அதிகம் ஈடுபடுவதால் பணத்தால் எந்தக் கவலையும் இவர்களுக்கு வருவதில்லை.

வாழ்க்கையில் மிகுந்த விருப்பமுடைய இவர்கள், சுற்றுலா விரும்பிகளாவர். நிறைய நண்பர்கள் இருந்தாலும் நெருக்கமாக யாரையும் வைத்துக்கொள்வதில்லை. மாபெரும் நிறுவனங்களின் பொறுப்பு இவர்களை வந்தடையும், அரசின் உயர் பதவிகளில் பதவி பெற வாய்ப்புண்டு. இந்தப் பெயரைக் கொண்டவர்கள் 2,6 ஆகிய திகதிகளில் பிறந்திருந்தால் அவமரியாதை ஏற்படும்.

உஷ்ணம், காரம், உப்பு மிகவும் ருசித்து உண்பர். சிறிதளவு சாப்பிட்டாலும் சிறப்பாக உண்ண வேண்டும் என்பர். அழகை ரசிக்கும் இவர்களுக்கு வாழ்க்கைத் துணையும் அழகாகவே அமையும். ஆனாலும் கொஞ்சம் நகைச்சுவையுள்ளவராக இருப்பர்.

பகலில் நடப்பவை, சூரிய சக்தியால் இயங்குபவை, உஷ்ணம் சார்ந்தவை, ஏற்றுமதி, இறக்குமதி, கல்வி நிறுவனம் போன்ற தொழில்கள் இவர்களின் பெரும் வெற்றிக்கு வித்திடும். எங்கு சென்றாலும் தனித்துவம் வாய்ந்த இவர்கள், பிறரின் எண்ணத்தையும் கருத்தில் கொண்டு செயற்பட்டால் வெற்றிக்கொடி நாட்டலாம்.



# பெண்கள் பிரச்சினைகளை எளிதாக சமாளிப்பது எப்படி?

சிறிய புன்னகை அதிகளவு சக்தி வாய்ந்தது. புன்னகை மூலம், எதிரிகளைக்கூட நண்பர்களாக்கிக் கொள்ளலாம். ஒருவரின் தோற்றத்தை, செலவே இல்லாமல் வசீகரமாக மாற்றக் கூடியது அவரது புன்னகையே. அந்தச் சிரிப்பு, வெறும் உதடுகளின் அசைவு மட்டும் இல்லை. அது உறவின் வெளிப்பாடு. சிரித்த முகத்தைப் பார்க்கும்போது, எத்தனையோ பிரச்சினைகளை மீறி, ஒரு நம்பிக்கை விதை மனதில் விழுகிறது. உங்கள் சிரிப்பு, உங்கள் தனித்துவத்தை உயர்த்துவதோடு, உங்களை வசீகரமாகவும் காட்டும். எனவே, சிரித்த முகத்துடன் இருக்கப் பழகுங்கள். அழும் குழந்தையை விடச், சிரிக்கும் குழந்தையைத் தானே நாம் அனைவரும் விரும்புகிறோம். சிடுமூஞ்சிப் பெண்ணை விட, சிரித்த முகம் கொண்ட பெண் தானே விளம்பரங்களுக்கு ஏற்றவள். பிறரை வசீகரப்படுத்தவும், எப்படிப்பட்ட நபரையும் சமாளிப் பதற்கும் அவசியமான ஒன்று உங்கள் புன்னகை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, வீடாக இருந்தாலும் சரி, பணியாற்றும் இடமாக இருந்தா லும் சரி, புன்னகை பூத்திடுங்கள். பணியிடத்தில் புன்னகையையும், ஆதரவான பார்வையையும் தவழ விடுங்கள். இது செயற்கையான விடயமாகத் தோன்றலாம். ஆனால், கடுமையான அலுவலகச் சூழலைச் சரி செய்யும் கருவியாக, உங்கள் புன்னகை செயற்படும். உடனடியாக இல்லா விட்டாலும், காலப் போக்கில் உங்கள் புன்னகை அவர்களிடம் மாற் றத்தை ஏற்படுத்தி, அவர்கள் உங்களை [illegible]

உங்களின் இந்தப் புன்னகை, நீங்கள் மற்றவருடன் கொள்ளும் உறவை, வலுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த ஆயுதம் என்றாலும், தேவையற்ற இடங்களிலோ அல்லது தேவையற்ற நபரிடமோ காட்டினால், நீங்கள் தேவையில்லாத பிரச்சினையைச் சந்திக்க நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறிப்பாக பெண்களுக்காக ஏங்கும் சக ஊழி யர்களிடமோ, பெண்களிடம் தவறாக நடக்கும் ஆசாமிகளிடமோ புன்னகையை நீங்கள் தொடர்ந்தால், விளைவு வேறு மாதிரியாக இருக்கும் என்பதைச் சற்றும் மறக்காதீர்கள்.


> “சிரித்த முகத்தை பார்க்கும் போது, எத்தனையோ பிரச்சினைகளை மீறி, ஒரு நம்பிக்கை விதை மனதில் விழுகிறது. உங்கள் சிரிப்பு, உங்கள் தனித்துவத்தை உயர்த்துவதோடு, உங்களை வசீகரமாகவும் காட்டும். எனவே, சிரித்த முகத்துடன் இருக்கப் பழகுங்கள்.

அப்படி மறந்தால், அனாவசிய வம்பில் மாட்டிக் கொள்ள நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவையான இடங்களில், உங்கள் புன்னகையைத் தவழ விட்டு, வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்காத நிலையில் உள்ள மணிக்கூண்டு கடிகாரங்கள்



கொழும்புத்துறை, ஓக. 17
யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றான மணிக்கூண்டுக் கோபுரத்திலுள்ள கடிகாரங்கள் கடந்த பல மாதங்களாக பழுதடைந்து இயங்காத நிலையில் காணப்படுகிறது.
நீண்ட காலமாக பாவனையில் இருந்து வந்த முள் கடிகாரம் போர் நடவடிக்கைகளின்போது சேதமடைந்திருந்தது. பின்னர் புதிய முள்கடிகாரம் பொருத்தப்பட்டு சிறிது காலத்தில் பழுதடைந்ததைத் தொடர்ந்து எலக்ரோனிக் கடிகாரம் பொருத்தப்பட்டது. பின்னர் குறித்த கடிகாரம் சரிவர இயங்க மறுத்த நிலையில் மீண்டும் முள்கடிகாரம் பொருத்தப்பட்டிருந்தது. இறுதியாகப் பொருத்தப்பட்ட கடிகாரமும் கடந்த சில மாதங்களாக செயலிழந்து காணப்படுகிறது. இந்த விடயத்தில் யாழ். மாநகரசபை கவனமெடுத்து தரமான கடிகாரத்தை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(ற-135)

# வலி.தென்மேற்கு வீதிப் புனரமைப்பு நிதி ஒதுக்கியும் ஆரம்பமாகவில்லை

## உறுப்பினர்களும், பொதுமக்களும் விசனம்

வலி.தென்மேற்கு, ஓக. 17
வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று வீதிகளைப் புனரமைப் பதற்கு சபைக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் பல மாதங்களாகியும் வேலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை. இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர்களும், பொது மக்களும் சம்பந்தப்பட்டவர்களின் அக்கறையின்மையே இந்த நிலைக்கு காரணம் என்று தெரிவித்துள்ளனர்.
28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட வலி.தென்மேற்கில் உள்ள அனேகமான வீதிகள் மக்கள் நடமாட முடியாத நிலையில் பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் உள்ளன. இந்த நிலை குறித்து உறுப்பினர்களும் பொது மக்களும் பல தடவை பிரதேச சபைக்குத் தெரியப்படுத்திய போதிலும் இன்று வரை மேற்படி வீதிகள் புனரமைக்கப்படாமலே இருக்கின்றன.
இந்த நிலையில் உறுப்பினர்களான ஆ.சி. கணேசவேல், எஸ். குமணன் ஆகியோரின் கோரிக்கைக்கு அமைய ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி வீதி, சில்லாலை கொட்டைக்காட்டு வீதி, வடலியடைப்பு புத்தானை சித்திவிநாயகர் கோயில் வீதி ஆகிய மூன்று வீதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பதற்கு சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது.
நிதி ஒதுக்கப்பட்டு பல மாதங்களாகியும் மேற்படி வீதிகளின் புனரமைப்பு வேலைகள் இன்று வரை ஆரம்பிக்கப்படவில்லை. மேற்படி வீதிகளில் உள்ள அடைக்கலநாயகி தேவாலயம், புத்தானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆகிய ஆலயங்களின் வருடாந்த உற்சவம் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் வீதிகள் புனரமைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கவலை தெரிவித்துள்ள உறுப்பினர்களும் பொதுமக்களும் சம்பந்தப்பட்டவர்களின் அக்கறையின்மையே இதற்குக் காரணம் என்று தெரிவித்துள்ளனர். (ற-115)

# அவசர பொதிகள் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 17
[illegible]ன்புறுத்தல், முறை யற்ற குழந்தைப் [illegible]ரசவம், பாலியல் துன் புறுத்தல் போன்றவற் றால் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கென சேர்க்கப்படும் பெண்க ளுக்குத் தேவையான அடிப்படை பொருள் களடங்கிய அவசர பொதிகளை யு.என். எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கியுள்ளது. அவற்றின் ஒரு தொகுதி யாழ். மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டுள் ளன.
இதன் முதற்கட்டமாக 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொண்ட 75 பொதிகள் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படும் மேற்குறிப்பிட்ட – உதவி களற்ற நோயாளிகள் வைத்தியசாலை யிலுள்ள பாலியல் சார்ந்த வன்முறைகள் தடுப்புக் குழுவினரால் இனங்கண்டு இவை அவர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## முதியோர் சங்கங்களிடையே வினாடி வினா போட்டிகள்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் முதி யோர் சங்கங்களுக்கிடையே வினாடி வினா மற்றும் பாடல் போட்டிகளை நடத்தி வருகின்றது. இந்தப் போட்டிகள் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் நடத்தப்பட வுள்ளன.
யாழ்.மாவட்டத்துக்கான வினாடி வினாப் போட்டிகள் கைதடி முதியோர் சங்க கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அதில் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட முதியோர் சங்கங்களின் உறுப்பினர் கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் மூன்று முதியோர் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டன.
சண்டிலிப்பாய் முதியோர் சங்கம் முதலாவதாகவும், கோப்பாய் முதி யோர் சங்கம் இரண்டாவதாகவும், தெல்லிப்பழை முதியோர் சங்கம் மூன்றாவதாகவும் தெரிவு செய் யப்பட்டன. அதேசமயம் முதியோர் சங்கங்களுக்கு இடையேயான பாடல் போட்டி ஒன்று வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மண் டபத்திலும் இடம்பெற்றது. (ற-17)

## தொழில்துறையை தெரிவு செய்வோருக்கு நிதியுதவி

வடமாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடியதுமான தொழில் துறையை தெரிவு செய்பவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் 50 வீத நிதியை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.
இந்தத் தொழில் துறையை கல்வித் துறை, மருத்து வத் துறை தவிர்ந்த எந்தத் துறையையும் தெரிவு செய்யலாம் எனவும் இவ்வாறான முயற்சி யொன்றுக்காக 6 கோடி ரூபா வரையி லான நிதி வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள் வதற்கு யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்துள்ளார். (ற-ரி3,5)

**தவறிவிட்டது**

ஐசுவரியம் பஞ்சோதி என்பவருடைய 442612390V தேசிய அடையாள அட்டையும், ஒரு தொகை காசும், ஆன்மீகப்புத்தகங்களும், முக்கிய ஆவணங்களும் மாவிட்ட புரச்சந்திக்கும் கீரிமலைக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 021 490 0731 (மாஸ்டர்)
077 176 9832

**பெயர்மாற்றம்**

அமுதாலய வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு என்னும் முகவரி கொண்ட மோகனதாஸ் புண்ணியராசா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து மோகனதாஸ் ரதன் என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.
ரதன்

## வியாபார முகாமைத்துவ பயிற்சி



தென்மராட்சி, ஓக.17
யாழ்.பனைசார் உற்பத்திப்பொருள்கள் கம்பனியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவன அனுசரணையுடனான மூன்று நாள் வியாபார முகாமைத்துவப் பயிற்சி நெறி கடந்த வாரம் நடை பெற்றுள்ளது.
யாழ்ப்பாணத்தில் பெண்களை முழுமையாகக் கொண்டியங்கும் யாழ். பனைசார் உற்பத்திப் பொருள் கள் கம்பனியின் வியாபார அபி விருத்திச் செயற்பாட்டின் முக்கிய பயிற்சி நெறியாக வியாபார முகாமைத்து வப் பயிற்சிநெறி நடத்தப்பட்டு வருகிறது கொழும்பில் உள்ள செபே இலங்கை என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வள[illegible]ளாக பங்குபற்றி பயி[illegible] வழங்குகின்றனர். (ற-9)

## குவைத் தூதுவருக்கு பிரியாவிடை

கொழும்பு, ஓக.17
இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் வை. அல் – அதீகிற்கான பிரியாவிடை நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கடந்த ஆறு வருடங்களாக இலங்கைக்கான குவைத் தூதுவராக கடமையாற் றிய இவர் விரைவில் தனது கட மைகளை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பவுள்ளார். இந்த நிலையிலேயே குறித்த நிகழ்வு நாட்டிலுள்ள சில முக்கிய இஸ் லாமிய நிறுவனங்களினால் ஏற் பாடு செய்யப்பட்டது.
பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடம், கல்லெலிய முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரி, ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி, அகில இலங்கை ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம் மதிய்யாஇ எம்.எப்.சீ.டி என்று அழைக்கப்படும் கலாசார மற்றும் அபிவிருத்திக் [illegible] மற்றும் [illegible] ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. (ற-9)

**" றோயல் சுத்தமான தேங்காய் எண்ணெய்"**

கப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத் தேங்காயெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பாக்கிறியள்?
மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன். ஒண்டிலையும் வாசனையோ, சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்
கப்பு:- இதுக்கு ஏன் குழப்பம் நேரடியா சிவா நறுமணப் பூங்கா கடைக்குப் போங்கோ. அங்க "றோயல் தேங்காயெண்ணையிண்ட" சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான, சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு "றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை" அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப்ப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.
மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு கப்பு. எல்லாக் கடைகளிலும்பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Packed by:
Royal Industry
Colombo- 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சிற்றம்பலம் மாணிக்கவாசகர்

(ஓய்வு பெற்றஅதிபர்)

தோற்றம்
15 . 05 . 1952


மறைவு
17 . 08 . 2014

கண்முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனாலும்....
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து - நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்....
கண்விட்டு மறையாமல் - நீங்கள்
எம் முன் எந்நாளும் வாழ்வீர்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.09.1933

இறப்பு 15.08.2015

Mary Construction பணிப்பாளர் அன்ரன்
ராஜசேகரன் மாலினி அவர்களின் பேர்த்தி

திருமதி
## அந்தோனிப்பிள்ளை
## மேரியோசப்பின்
(பூட்டியம்மா)

புவி வாழ்வில் நீடித்து நின்றோங்கிய நிழல் தருவே
தவிக்கவிட்டுச் சென்றாய் என அறிந்து
நவிலவும் முடியாத துயர் கொள்கின்றோம்
கவிதையால் உங்கள் பெருமை பாடவும் முடியவில்லை
நதியாகிப் பெருகி குடும்பத்தைக் காத்தவளே
நீதியாக வாழ்ந்த எங்கள் தாயே !
முதுசொமாய் வாழ்ந்தவளே உங்கள்


ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
மேரிகொன்ஸ்ரக்சன், ஆனைக்கோட்டை
MARY CONSTRUCTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோரம் அடுக்கப்படும் பொருள்களால் சிரமம்

## கொடிகாமம் நகரப்பகுதி மக்கள் தெரிவிப்பு



தென்மராட்சி, ஓக.17
சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் நகரப்பகுதி வர்த்தகர்கள் வீதியை மறைத்துப் பொருள்களை அடுக்குவதால் வாகனப் போக்கு வரத்துக்கு பெரும் இடையூறாக இருப்பதாக பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் தெரிவித்துள்ளனர்.
குறிப்பாக கொடிகாமம்– பருத்தித்துறை வீதியில் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணத்தை மேற்கொள்வதுடன் பெருமளவு மக்கள் நடந்தும் செல்கின்றனர்.
இந்த நிலையில் இவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள வர்த்தகர்கள் தமது விற்பனைப் பொருள்களை வீதி வரை அடுக்கி வைப்பதால் இரு வாகனங்கள் விலகிச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.
பிரதேச சபையின் கடைத் தொகுதிகளில் மக்கள் நடமாட விடப்பட்ட விறாந்தைகளை பொருள்களால் மூடி பொதுமக்கள் போக்குவரத்துக்கு தடை செய்துள்ளதுடன் மேலும் வீதியோரத்திலும் பொருள்களைப் பரப்பியுள்ளனர். அத்துடன் அந்தக் கடைகளுக்கு வடக் குப் புறமாக உள்ள தனியார் கடைகளும் தமது கடையில் உள்ள பொருள் களை வீதியோரம் வரை பரப்பி வைப்ப தால் போக்குவரத்து செய்வோர் வாகனங்களால் விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.
இது தொடர்பாக பொதுமக்கள் வாகனச் சொந்தக்காரர்கள் ஆகியோர் அங்குள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் முறையிட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படா ததால் மக்களும் வாகனங்களும் சிரமங்களை தினமும் சந்திக்க வேண்டியுள்ளது.
மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்விடயத்தில் கரிசனை எடுத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் கடை விற்பனைப் பொருள்களை வீதியில் பரப்புவதைத் தடுக்குமாறும் கேட்டுள்ளனர். (ற-9)

# செல்லமுத்து மைதான திருத்தவேலை ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஓக. 17
விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துச் செல்லும் வீதியை மூடுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித் துள்ளதால் இரு துண்டுகளாக இருக்கும் விளையாட்டு மைதானத்தை இணைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மைதானத்தின் திருத்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் அமைந்துள்ள செல்லமுத்து விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துச் செல்லும் கனகசபை வீதியால் விளையாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஒருபகுதிபொதுமக்களும்விளையாட்டுக் கழகங்களும் தொடர்ந்து விளையாடுவதற்கு வசதியாக இரு துண்டுகளாக இருக்கும் விளையாட்டு மைதானத்தை இணைத்து வீதியை மாற்றி அமைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலரைக் கோரியிருந்தனர்.
இதேவேளை காலம் காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் மேற்படி வீதியை மூடி மாற்றியமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள அந்தப் பகுதியில் வசிக்கும் ஒரு தொகுதி பொதுமக்கள் இது குறித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தினர்.
இந்த நிலையில் இரு பகுதி மக்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக் களைக் கேட்டறிந்த பிரதேச செயலர் நீண்ட காலமாகப் பயன்படுத்தப் பட்டு வரும் மேற்படி வீதியை மூடுவதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன் விளையாட்டுக்கள் நடைபெறும் நேரங்களில் மாற்று ஒழுங்குகள் செய்யலாம்என்று தெரிவித்துள்ளதை அடுத்து வீதியை மூடும் வேலை கைவிடப்பட்டுள்ளது.
அதேநேரம் அரசால் வழங்கப்பட்ட கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா பணத்தில் மேற்படி மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்குகளை பிரதேச செயலர் மேற்கொண்டிருந்தார். தூண் போட்டு வலைகள் அமைக்கும் பணியை பெறுப்பேற்ற ஒப்பந்தக்காரர் போலியான தரம் குறைந்த கற்களைப் பயன்படுத்தி வேலைகளை மேற்கொள்வதாக பொதுமக்கள் பிரதேச செயலருக்கு நேரடியாக செய்துள்ள புகாரை அடுத்து பிரதேச செயலரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி வேலைகள் தரமான முறையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். (ற-115)

# கடலில் குளித்த சிறுவன் உயிரிழப்பு

அம்பாறை, ஓக, 17
பொத்துவில் அறுகம்பே கடலில் குளித்துக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சாய்ந்தமருது அஹமட் வீதியைச் சேர்ந்த நவாஸ் முஹம்மத் சிபாத் என்ற இளைஞனே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.
பொத்துவிலிலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு வந்த சமயத்தில் பெற்றோருடன் அறுகம்பே கடலில் குளிக்கச் சென்றுள்ளார். இதன்போதே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த குறித்த சிறுவனின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# உற்பத்தியாளர் சந்திப்பு டிசெம்பரில்

யாழ்ப்பாணம், ஓக. 17
இந்த வருடத்துக்கான வர்த்தகர்கள் உற்பத்தியாளர்கள் சந்திப்பு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.
இந்த சந்திப்பில் ஓட்டோ, சைக்கிள், விவசாய உபகரணங்கள், கையால் இயங்கக் கூடிய கருவிகள், புடைவை வகைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான கொள்வனவுக் கட்டணங்கள், சகாயவிலையில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும், 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் ஏதாவது குழுமத்தின் பிரதிநிதி ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் இலவசப் போக்குவரத்து, தங்குமிடம் என்பன வழங்கப்படும் எனவும் வணிகர்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி3)

# நாகசதுர்த்தி

யாழ்ப்பாணம். ஓக. 17
யாழ். வண்ணார்பண்ணை வட. கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாகசதுர்த்தி நடைபெறவுள்ளது. நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 5 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்திபூஜை மற்றும் வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் திரு வீதி உலாவரும் நிகழ்வும் நடைபெறவுள்ளதாக விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ற-ரி5)

# திவ்ய மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 17
பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் திவ்ய மஹோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பதினெட்டு நாள்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் செப்ரெம்பர் 05ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி3)

ஊடக அறிவித்தல் இல. 34

## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 17.08.2015

## வாக்கெடுப்புத் தினத்தன்று முறைப்பாடுகளைக் கையேற்றல் முறைப்பாடுகள் விசாரணை நிலையம்

**2015 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் வாக்கெடுப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்க வேண்டிய கண்காணிப்புக்கள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின், அதுதொடர்பாக செயற்படுவதற்கு தேர்தல்கள் செயலகத்திலும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள முறைபாடுகள் விசாரணை நிலையங்கள், வாக்கெடுப்புத் தினம் மு.ப. 6.30 தொடக்கம் செயற்படுகின்றது எனவும் முறைப்பாடுகள் அல்லது கண்காணிப்புக்களை முன்வைக்கும் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

தேர்தல்கள் செயலகத்தில் அமைந்துள்ள முறைப்பாட்டு நிலையம்

| மாவட்டம் | தொலைபேசி இல. | தொலை நகல் இல. |
|---|---|---|
| கொழும்பு | 0112879049<br>0112879050 | 0112879004<br>0112879009 |
| கம்பஹா/ களுத்துறை | 0112879051<br>0112879053 | 0112879010<br>0112879011 |
| கண்டி/ மாத்தளை/ நுவரெலியா | 0112879054<br>0112879056 | 0112879012<br>0112879014 |
| காலி/ மாத்தறை/ அம்பாந்தோட்டை | 0112879057<br>0112879058 | 0112879015<br>0112879017 |
| யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ மன்னார்/ வவுனியா/ முல்லைத்தீவு | 0112879059<br>0112879060 | 0112879018<br>0112879019 |
| மட்டக்களப்பு/ திகாமடுல்ல/ திருகோணமலை | 0112879062<br>0112879063 | 0112879021<br>0112879022 |
| குருநாகல்/ புத்தளம் | 0112879064<br>0112879065 | 0112879023<br>0112879024 |
| அநுராதபுரம்/ பொலன்னறுவை | 0112879066<br>0112879067 | 0112879025<br>0112879026 |
| பதுளை/ மொணராகலை | 0112879068<br>0112879072 | 0112879028<br>0112879030 |
| இரத்தினபுரி/ கேகாலை | 0112879073<br>0112879077 | 0112879035<br>0112879038 |

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் அமைந்துள்ள முறைப்பாட்டு நிலையங்கள்

| மாவட்ட முறைப்பாட்டு விசாரணை நிலையம் | தொலைபேசி இல. | தொலை நகல் இல. |
|---|---|---|
| மாவட்ட செயலகம், கொழும்பு | 0113883149 | 0112369118 |
| மாவட்ட செயலகம், கம்பஹா | 0332222841 | 0332234240 |
| மாவட்ட செயலகம், களுத்துறை | 0343944537 | 0342222245 |
| மாவட்ட செயலகம், கண்டி | 0812225394 | 0812233190 |
| மாவட்ட செயலகம், மாத்தளை | 0662222413 | 0662226542 |
| மாவட்ட செயலகம், நுவரெலியா | 0522222648 | 0522222648 |
| மாவட்ட செயலகம், காலி | 0913099018 | 0912245018 |
| மாவட்ட செயலகம், மாத்தறை | 0413041800 | 0412222435 |
| மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை | 0473470108 | 0472256107 |
| மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | 0213207443 | 0212228002 |
| மாவட்ட செயலகம், கிளிநொச்சி | 0212285467 | 0212283830 |
| மாவட்ட செயலகம், மன்னார் | 0233238512 | 0232251752 |
| மாவட்ட செயலகம், வவுனியா | 0243201606 | 0242220797 |
| மாவட்ட செயலகம், முல்லைத்தீவு | 0212230035 | 0212290045 |
| மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | 0653065294 | 0652222487 |
| மாவட்ட செயலகம், அம்பாறை | 0632223553 | 0632223553 |
| மாவட்ட செயலகம், திருகோணமலை | 0263207177 | 0262222305 |
| மாவட்ட செயலகம், குருநாகல் | 0372224970 | 0372224976 |
| மாவட்ட செயலகம், புத்தளம் | 0323021232 | 0322265061 |
| மாவட்ட செயலகம், அநுராதபுரம் | 0252227855 | 0252227855 |
| மாவட்ட செயலகம், பொலன்னறுவை | 0272222385 | 0272222385 |
| மாவட்ட செயலகம், பதுளை | 0552224414 | 0552224414 |
| மாவட்ட செயலகம், மொணராகலை | 0553590471 | 0552276245 |
| மாவட்ட செயலகம், இரத்தினபுரி | 0452222236 | 0452222236 |
| மாவட்ட செயலகம், கேகாலை | 0354913448 | 0352222561 |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய,
2015.08.17ஆம் திகதி
E/15PE/ ComplainpollDay

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

அச்சுவேலி, ஓக.17

மத்திய காணி அமைச்சு, மாவட்ட நிலையில் வெற்றிடமாக இருக்கும், காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிகளைப் பூர்த்தி செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பங்கள் 2015.08.21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை ஜூலை 24 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (ற-11)

## வாக்குச் சாவடிகளில் கைபேசி, ஒளிப்படம் என்பவற்றுக்குத் தடை

கொழும்பு, ஓக.17

வாக்குச் சாவடிகளுக்குள் செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல் மற்றும் ஒளிப்படங்களை எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கிறார்.

இவற்றைவிட வாக்குச் சாவடி அமைந்துள்ள பகுதியில் வீடியோ படங்களை எடுத்தல், ஆயுதங்கள், சுடுகலன்களை வைத்திருத்தல், புகைப்பிடித்தல் மற்றும் மதுபானங்கள், போதைப் பொருள்களைப் பயன்படுத்தல் என்பன முற்றாக தடைசெய்யப்பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (ற-22)

## விபத்தில்ஒருவர் காயம்

பளை, ஓக.17

யாழ்ப்பாணத்திலிருந்து வாகனத்தை ஏற்றிச் சென்ற ஹெயின் வாகனம் ஏ-9 வீதியில் தேங்காய் ஏற்றிவந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இயக்கச்சி சந்தியில் இடம்பெற்றது.

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து தேங்காய் கட்டி வந்தவேளையில் இயக்கச்சி சந்தி வளைவில் வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் சிகிச்சைக்காக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ற-9)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.17

காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பயன்பெற விரும்புபவர்கள் உரிய ஆவணங்களுடன் இச் செயலக பதிவாளர் கிளை மற்றும் கிராம அலுவர்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார். (ற-ரி3)

### 9ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சுகுணராசா நிமலன்

தோற்றம் 22.04.1981

மறைவு 17.08.2006

நித்தம் உன் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, அக்கா, அத்தான், மனைவி, மகன், மருமக்கள்.
ஞானவைரவர் வீதி, கரந்தன், நீர்வேலி.

### மரண அறிவித்தல்

**தட்சணாமூர்த்தி கரிகாலன்**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்ஸ் Villiers sur/ Marne இல் வசித்துவந்தவருமாகிய தட்சணாமூர்த்தி கரிகாலன் 15.08.2015 சனிக்கிழமை அதிகாலை 2.00 மணிக்கு பிரான்ஸ் வைத்தியசாலையில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


பிரான்ஸ்: 003 375 389 0497
இலங்கை: 077 076 2885, 077 711 6090

தகவல்: பிரேமானந்தன்(கண்ணன்)

### மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் கனகசபை செல்வராஜா**

(P.K. Selvarajah) (இளைப்பாறிய தொழில் அதிகாரி)



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகசபை செல்வராஜா (இளைப்பாறிய தொழில் அதிகாரி (Retired Labour officer) 15.08.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை, அன்னரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் (சிரேஸ்ட புதல்வன்) காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தசாமி - செல்லமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவபூசணியின் அன்பு கணவரும் நிலா, பிரபாகரன் (பிரதம பொறியியலாளர், இலங்கை மின்சார சபை - வவுனியா Chief Engineer at Ceylon Electricity Board - Vavuniya), பிரகாஷ் (Canada), நிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கநாதன் (உரிமையாளர் ஸ்ரீ பேக்கரி - மன்னார்) , ஜெயசக்தி, ஸ்ரீஜெகநாயகி, பாலகுமார் (Assistant Production Manager - Cargills) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜீவ், ரணிஜா (HNB), ராகுல், ரம்யா, அர்ஜீன், நிரோஷன், நிதிஷா, நிலக்ஷா, சந்தோஷ், சரண் ஆகியோரின் பாசமிகு பேரனும் மகேந்திரராஜா (Canada), ரத்தினராஜா (Canada), வரதராஜா (France), ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவசீலன், தவமலர் (Canada), உபேந்திரன், ஸ்ரீதரன் (Canada), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல. 21, Wymen வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் (தற்காலிக வதிவிடம்) இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு
பாலகுமார் 0777600227
ஸ்ரீரங்கநாதன் 0252222118

தகவல்: குடும்பத்தினர்.

## கீரிமலைக் கேணியை உடன் புனரமைக்குமாறு கோரிக்கை



வலி.வடக்கு, ஓக.17

இந்து மக்களின் வரலாற்று பிரசித்தி வாய்ந்த கீரிமலைக் கேணி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றது. இந்தக் கேணியை உடனடியாக திருத்தி அதனுடைய வரலாற்றையும், இந்து கலாசார மரபுகளையும் காப்பாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் கீரிமலைக் கேணி பாதிக்கப்பட்டது. அந்த வேளையில் கேணியின் சுவர்கள் உடைந்து சேதமடைந்ததுடன் கேணியின் படிக்கட்டுக்களும் கூட சேதம் அடைந்து இருந்தன. கேணியின் சுவர்கள் மீள அமைக்கப்பட்டு திருத்தப்பட்ட போதிலும் கேணியின் பாதிக்கப்பட்ட படிக்கற்கள் திருத்தப்படாத நிலைமை காணப்பட்டது. தற்போது சேதம் அடைந்த பகுதிகள் ஊடாக கடல், கேணியினுள் உள். நுழைவதால் கேணியின் சுற்றுப்புறம் கடல் அரிப்புக்கு உள்ளாகத் தொடங்கியுள்ளது என்றும் அதன் காரணமாக கேணியின் படிக்கற்கள் உடைந்து கேணியினுள் விழத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வலி. வடக்கு பிரதேச சபை, வட மாகாண சபை, யாழ்.மாவட்ட அரச அதிபர் உரிய கவனம் எடுத்து இதனை திருத்த வேண்டும் என்றும் இல்லையென்றால் உரிய இந்து அமைப்புக்கள், ஆலயங்கள் தமது நிதியில் இருந்தேனும் இதனை திருத்தி கலாசார பண்புகள் மரபுகள் கெடாது பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-86)

## மாடுகள் பிரதான வீதியை கடக்கும் இடங்களுக்கு அடையாளக் குறியீடு

### சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் கோரிக்கை

அச்சுவேலி, ஓக. 17

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ளடங்கும் யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் மாடுகள் வீதியை கடக்கும் இடங்களை அடையாளம் செய்யும் குறியீடுகள் இடப்படவேண்டும் என வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலக சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக்கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.

பட்டி மாடுகள், கட்டி வளர்க்கும் மாடுகள் பிரதான வீதியை குறுக்காக கடக்கும் போது வாகனங்கள் மோதி பெருமளவில் விபத்துக்கள் நடக்கின்றன. இந்த வகையில் சிறுப்பிட்டியில் அண்மையில் நடந்த விபத்தில் ஏழு மாடுகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டன. பத்துக்கும் மேற்பட்ட மாடுகள் படுகாயம் அடைந்தன. அத்துடன் வாராந்தம் நடைபெறும் விபத்துக்களில் பெறுமதிமிக்க நல்லின கறவைப்பசுக்கள் மற்றும் அவற்றின் கன்றுகள் விபத்துக்கு உள்ளாகின்றன, சாவடைகின்றன.

இது தொடர்பாக சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டன. கண்டி வீதியில் மற்றும் வெளி மாவட்டங்களில் யானைகள் மற்றும் காட்டு மிருகங்கள் வீதியைக் கடக்கும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும்போது ஏன் மாடுகள் வீதியைக் கடப்பதற்கு அடையாளம் இடப்படாது என்ற வினாவும் மேலெழுந்துள்ளது.

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையடி, நீர்வேலிச் சந்தி, நீர்வேலி மதவடி, அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கி மந்தைகள் கடப்பதற்கு உரிய அடையாளத்தை பிரதான வீதியில் அடையாளப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-11)

### 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 02.07.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

அமரர் கிருஷ்ணகுமார் கஜேந்திரன் (பாபு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (17.08.2015) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

அரசபு வீதி, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.

## சுகாதார விதிமுறை மீறிய நால்வருக்கு அபராதம்

வலி.தென்மேற்கு, ஓக. 17

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக நடமாடும் பாண் விற்பனையில் ஈடுபட்ட நால்வர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து மல்லாகம் நீதிவான் அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்களால் அதிகம்பாதிக்கப்பட்டுள்ளது என்று இனங்காணப்பட்ட நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்களில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ரஜீவ் தலைமையில் சென்ற சுகாதார உத்தியோகத்தினர் நடமாடும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட வேறு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு ஓட்டோக்களை மறித்து சோதனை செய்தபோது மருத்துவச் சான்றிதழ் இல்லாமலும் தொற்றுநோயை ஏற்படுத்தும் வகையில் வெதுப்பக உற்பத்திப் பொருள்கள் காணப்பட்டதைக் கண்டு பிடித்தனர்.

குறித்த நால்வருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நால்வரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் மூவருக்குதலா 5 ஆயிரம் ரூபாவும் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துள்ளார். (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரவுசர் இரகசியம் தெரியுமா?



**பெ**ரும்பாலான நேரங்களில் நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பல இணையத்தளப் பக்கங்களைத் (டேப்கள்) திறந்து வைத்திருக்கலாம். இன்னொன்று பல நேரங்களில் இந்தப் பக்கங்களை அனைத்தையும் அப்படியே சேமித்து வைக்கவும் விரும்பலாம்.

அப்படியெனில், உங்கள் பிரவுசரிலேயே அதற்கான எளிதான வழி இருக்கிறது. நீங்கள் பயர் பாக்ஸ் பிரவுசரைப் பயன்படுத்துபவர் என்றால் இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் இணையப் பக்கங்கள் அனைத்தையும் சேமிக்க விரும்பினால் , ஏதேனும் ஒரு பக்கத்தில் மவுசில் வலப்பக்கம் கிளிக் செய்தால் வரும் மெனு கட்டங்களில் புக்மார்க் ஓல் டேப்ஸ் என்பதை கிளிக் செய் தால் அனைத்துப் பக்கங்களும் சேமிக்கப் பட்டுவிடும். இதற்கெனத் தனிப் பெயரும்கொடுக்கலாம். குரோம் பிரவுசரிலும் இதேபோன்ற வசதி இருக்கிறது. சேமித்த பேல் டரில் நடுவே கிளிக் செய்தால் சேமித்த பக்கங்கள் அனைத் தும் பிரவுசரில் வரிசையாக எட்டிப் பார்க்கும். பிரவுசரில் உள்ள, பார்த்துக் கொண்டிருந்த பக்கங் களை மீண்டும் வரவழைக்கும் ரிஸ்டோர் வசதியை விட இது எளிமையானது.

## iOS சாதனங்களைக் கலக்க வரும் RollerCoaster Tycoon 3

**ஹேம்** பிரியர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான ஹேம்கள் அறிமுகம் செய்யப்பட்டுவரும் நிலையில் RollerCoaster Tycoon 3 எனும் ஹேமினை iOS சாதனங்களுக்காக Frontier Developments நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

4.99 அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் இக் ஹேம் ஆனது ஏனைய ஹேம்களிலிருந்து வேறுபட்டு பல சுவாரஸ்யமான அம்சங்களை உள்ளடக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை iOS அல்லது அதற்கு பின்னரான இயங்குதளங்களைக் கொண்ட iPhone மற்றும் iPa- என்பனவற்றில் நிறுவிப் பயன்படுத்த முடியும்.






## Windows 10 Compute Stick



**வி**ண்டோஸ் 10 இயங்குதளத்தைக் கொண்ட USB Compute Stick ஒன்றை இன்டெல் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதன் பெறுமதி 150 டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Intel Atom Z3%35F Bay Trail QuaddCore Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் கொண்டுள்ள இச் சாதனத்தில் Micro USB Port, USB 2.0 Port, HDMI, MicroSD slot, WiFi and Bluetooth 4.0 என்பனவும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இதேபோன்றே முன்னர் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட USB Compute Stick அறிமுகம் செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 69 வது சுதந்திர தின நிகழ்வுகள் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது.(ஐ)

# நைஜரில் கனமழை

## 20 ஆயிரம் மக்கள் பாதிப்பு: 4 பேர் சாவு



நியாமே, ஓக.17

ஆபிரிக்காவின் நைஜர் நாட்டில் பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தினால் 20 ஆயிரத்துக் கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப் பட்டுள்ள தாகவும், 4 பேர் உயிரிழந் திருப்பதாக வும் ஐ.நா. தெரிவித்துள் ளது.

கடந்த மாத இறுதியில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருவ தால் மத்திய மற்றும் தெற்கு நைஜர் பகுதிகள் வெள்ளக்காடாகக் காட்சி யளிக்கின்றன. நைஜர் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் ஆற்று முகத்துவாரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறும்படி ஏற்கனவே எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. .

ஆபிரிக்காவின் மூன்றாவது மிகப் பெரிய நதியான நைஜர் நதியில் வெள்ளம் அபாய நிலையைத் தாண்டியுள்ளது.

மழை வெள்ளத்தினால் 2 இலட்சத்து 170 வீடுகள் அழிவடைந்துள்ளன. 545 ஹெக்ரேயர் விவசாய நிலங் கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. தாழ்வான பகுதிகளில் வசித்த 2 ஆயிரத்து 100 பேர் வெளியேற் றப் பட்டு பாடசாலைகள் மற்றும் அவர் களின் உறவினர்களின் வீடு களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித நேய விவகாரங்க ளுக்கான ஐ.நா. ஒருங்கிணைப்பு அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)



## சீன வெடிவிபத்துச் சம்பவம் சாவு எண்ணிக்கை உயர்வு

பீஜிங், ஓக.17

சீனாவின் துறைமுக நகரங்களில் ஒன்றான தியான்ஜினில் உள்ள ருய் ஹாய் பண்டகசாலையில் இரசாய ணங்கள் மற்றும் எளிதில் தீப்பற்றும் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கொள்கலன்களில் கடந்த 12 ஆம் திகதி இரவு இரு வெடி விபத்துகள் இடம்பெற்றன. அந்தப் பகுதியை உலுக்கிய இந்த வெடி விபத்துகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 ஐயும் தாண்டியுள்ளது. அவர்க ளில் தீயணைக்கும் படை வீரர்கள் 21 பேரும் அடங்குவர். 90 க்கும் மேற்பட்டவர்களைக் காண வில்லை. 721 பேர் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ள னர். சம்பவம் நடைபெற்று 5 நாள்கள் கடந்தும் இன்னும் அதன் பேர ழிவில் இருந்து அந்த நகரம் மீளவில்லை. சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் வசிக்கும் அந்த நகரத்தில், தொடர்ந்து சிறு வெடி விபத்துக்களாலும், தீயினாலும் பதற்றம் தொடர்கிறது. 6 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர். வெடி விபத்துக்கள் தொடர்பான வதந்திகளைப் பரப்புவ தாகக்கூறி 300 க்கும் மேற்பட்ட சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டுள் ளன.

வெடி விபத்து நடந்த பகுதியில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் வசிக் கும் மக்கள் அனைவரும் அங்கி ருந்து வெளியேறுமாறு சீன அரசு உத்தரவிட்டுள்ளது. வெடிவிபத்து நடைபெற்ற இடத்தில் சோடியம் சயனைடு என்னும் கொடிய விஷ இரசாயனம் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இதன் நச்சுகாற்றைச் சுவாசித் தால்–சாவு ஏற்படும். ஆனா இதனை அதிகாரிகள் உறுதிப்படுத்த வில்லை. (ஐ)

## சிரியா சிறையில் கைதிகள் வன்முறை

டமாஸ்கஸ்,ஓக.17

சிரியாவில், தலைநகர் டமாஸ்கஸ்சிலிருந்து 213 கி.மீ. வடக்கே ஹமா நகரில் உள்ள சிறையில் அதிகளவான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் அங்கு கைதிகள் ஒன்று திரண்டு வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். அந்தக் கைதிகள் சிறைகளில் உள்ள தளபாடங்கள் மற்றும் ஏராளமான பொருள்களை அடித்து நொறுக்கித் துவம்சம் செய்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்து கலவரக்காரர்களை பொலிஸார் விரட்டியடித்தனர். இந்த வன்முறையை அடுத்து அந்தச் சிறையில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கைதிகளில் பெரும்பாலோர் தீவிரவாத வழக்குகளில் தொடர்புடையவர்கள் ஆவர். கைதிகள் அனைவரும் ஒன்று திரண்டு சிறையில் போதுமான வசதிகள் செய்து தரப்படவில்லை என்றும், தங் களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை கடுமையானது எனவும் கூறி கடந்த ஜூன் மாதமும் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிங்கப்பூர் பயணிக்கும் பிரதமர் மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடம் நவம்பர் மாதம் சிங்கப்பூருக்கு அரச முறை சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளதாக சிங்கப்பூர் பிரதமர் லீ ஹசீன் லூங் தெரிவித்துள்ளார். சிங்கப்பூருக்கு அரசமுறைப்பயணமாகமோடிவருகை தருவது இரு நாட்டினதும் கொள்கை உறவு மேம்படுவதற்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## சிறைத் தண்டனையில் இருந்து தப்பிக்க சீனப்பெண்ணின் கில்லாடி வேலை

பீஜிங், ஓக.17

சீனாவில் சிறைத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக கடந்த பத்து வருடங்களில் 14 முறை கர்ப்பம் தரித்து சீனப் பெண்ணொருவர் பொலிஸாரை ஏமாற்றிவந்துள்ளார். வடமேற்கு சீனாவில் உள்ள க்ஸிங்ஜியாங் மாகாண தலைநகரான உரும்கி பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண்ணுக்கு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் ஊழல் வழக்கில் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையில் இருந்து தப்பிப்பதற்காக, தான் கர்ப்பமாக இருப்பதாக தண்டனை விதித்த நீதிவானிடம் அந்தப் பெண் தெரிவித்துள்ளார். அந்த நாட்டின் சட்டங்களின்படி, கர்ப்பிணிப் பெண்களைச் சிறையில் அடைத்து வைக்க முடியாது என்பதால் பிரசவத்துக்குப் பின்னர் அவரைக் கைது செய்து சிறையில் அடைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இந்தத் தற்காலிக சாதக அம்சத்தை நிரந்தர சாதகமாகக் கொள்ள திட்டமிட்ட அந்தப் பெண், உடனடியாக ஒரு மருத்துவரை அணுகி, கருக்கலைப்பு செய்து கொண்டார். பின்னர், உடல் நலம் தேறியதும் மீண்டும் கர்ப்பம் ஆனார். சில மாதங் களுக்கு பின்னர், அவரைத் தேடி வந்த பொலி ஸார் வீங் கிய வயிற்றுடன் இருந்த அந் தப் பெண்ணை கைது செய் யாமல் திரும் பிச் சென்றனர். கடந்த பத்து வருடங்களாக இவ்வாறே கர்ப்பிணியாவது – கருச்சிதைவு செய்து கொள் வது என பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவி, தற்போது பதினான்காம் முறையாக கர்ப்பிணி யாகியுள்ள அவரை எப்போதுதான் கைது செய்து சிறையில் அடைப்பது? என்று புரியாமல் பொலிஸார் குழப்பமடைந்துள்ளனர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்காவின் டைம்ஸ் சதுக்கத்தில் ஒன்று கூடிய தம்பதியினர், தங்களது துணையுடன் இணைந்து நேற்றுமுன்தினம் இரண்டாம் உலகப் போர் வெற்றியை முத்தமிட்டுக் கொண்டாடியுள்ளனர். அதற்குப் பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டயானாவின் சாவு கசியும் இரகசியம்

லண்டன்,ஓக.17

பிரிட்டனின் முன்னாள் இளவரசியான டயானா, கார் விபத்தில் இறந்தவுடன், அந்தச் செய்தியை கேட்ட மகாராணி அதிர்ச்சியில் கூறியுள்ள வார்த்தைகள் தற்போது கசிய ஆரம்பித்துள்ளன.

பிரிட்டன் இளவரசரான சார்ள்ஸின் மனைவியும் இளவரசர் வில்லியமின் தாயாருமான டயானா கடந்த 1997 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாரிஸில் இடம்பெற்ற கார் விபத்து ஒன்றில் பரிதாபமாக உயிரிழந்தார். இளவரசியின் சாவு சர்வதேச அளவில் துக்கத்தை ஏற்பட்டிருந்த நிலையில், அவரது சாவில் பல்வேறு சந்தேகங்களும் மர்மங்களும் தற்போது வரை நீடித்து வருகின்றன.



இந்த நிலையில், அரச சுயசரிதை எழுத்தாளரான இங்கிரிட் என்பவர் தற்போது ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். டயானா கார் விபத்தில் சிக்கி இறந்து விட்டார் என்ற செய்தியை மகாராணியான இரண்டாம் எலிசபெத்திடம் கூறும்போது, அவர் அதிர்ச்சியில் டயானாவின் கார் பிரேக்கில் யாரோ ஒரு நபர் திட்டமிட்டு கிரீஸ் எண்ணெய்யை தடவியிருக்க வேண்டும் என ஆவேசமாகக் கூறியதை அருகில் இருந்த ஒரு நபர் கேட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மகாராணியின் இந்தக் கூற்றின் மூலம், டயானா விபத்தில் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றும், அது ஒரு திட்டமிடப்பட்ட சதி தான் என்பது அவரது வார்த்தையிலேயே விளங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும், டயானாவுக்கும், மகாராணிக்கும் இடையே சுமுகமான உறவு இல்லை என்பதையும் இது காட்டுவதாக அந்த எழுத்தாளர் கருத்து தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாமல், டயானாவின் சாவு செய்தியைக் கேட்ட பின்னரும், அரச குடும்பத்தினர் துக்கமில்லாமல் மிகச்சாதாரணமாக இருந்ததும் பல்வேறு விமர்சனங்களை எழுப்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டன் முன்னாள் இளவரசியான டயானா இறந்து சுமார் 17 வருடங்களுக்குப் பின்னர் அவரது சாவு குறித்துப் புதிய தகவல் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# நடுக்கடலில் மூச்சுத்திணறல் 40 அகதிகள் சாவு

## இத்தாலியக் கடற்படைத் தகவல்

ரோம்,ஓக.17

மத்திய தரைக்கடல் பகுதியில் படகில் வந்த 40 அகதிகள் சாவடைந்துள்ளதாக இத்தாலியக் கடற்படை தெரிவித்துள்ளது.



பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். கடத்தல்காரர்கள் மூலம் சட்டவிரோதமாக மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறி வருவது அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுக்க கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு சட்டவிரோதமாக வரும் அகதிகள், சில சமயங்களில் கடலில் தத்தளித்து உயிரையும் விடுகின்றனர். உயிர்பிழைத்தவர்கள் மீட்கப்பட்டு அவர்களது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்த நிலையில் சுமார் 400 பயணிகளுடன் சென்ற படகொன்று கடந்த சனிக்கிழமை லிபியாவில் இருந்து 21 மைல்கள் தொலைவில் மத்திய தரைக்கடல் பகுதியில் தத்தளிப்பதாக இத்தாலிக் கடற்படைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து கடற்படை வீரர்கள் அங்கு விரைந்து சென்று கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். படகில் வந்தவர்களில் சுமார் 40 பேர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்திருப்பதாகக் கடற்படை தெரிவித்துள்ளது. மேலும், மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் சாவு எண்ணிக்கை உறுதிப்படுத்தப் படவில்லை. (ஐ)

# இரண்டாம் உலகப் போர் அத்துமீறல் மன்னிப்புக் கோரும் ஜப்பான் பிரதமர்

டோக்கியோ,ஓக.17



இரண்டாம் உலகப்போர் நிறைவடைந்து 70 வருடங்கள் முடிவடையும் நிலையில், அந்தப் போரின் போது ஜப்பான் இராணுவம் நடத்திய அத்துமீறல்களுக்காக அந்த நாட்டின் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முன்தினம் பகிரங்க மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் செய்த செயல்களுக்காக ஜப்பான் திரும்பத்திரும்ப மன்னிப்பு கேட்டுள்ளது. போர் முடிந்ததில் இருந்து இந்தப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் வளத்துக்கு எங்களை நாங்களே அர்ப்பணித்து வருகின்றோம். போரில் சாவடைந்தவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிய நாடுகள் பட்ட துயரங்கள், எங்கள் இதயத்தில் பதிந் துள்ளன. இனிவரும் சந்ததிகள், இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டியது இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 17 மணித்தியாலங்கள் பயணிக்கும் தொடர் விமானச் சேவை ஆரம்பம்

டுபாய், ஓக.17

இடையில் எங்கேயும் தரை இறங்காமல் டுபாயில் இருந்து புறப்பட்டு மத்திய அமெரிக்காவில் உள்ள பனாமா நகர் வரை சுமார் 17 மணி நேரம் 35 நிமிடங்களுக்கு பறந்து செல்லும் உலகின் நெடுநேர இடைநில்லா விமானச் சேவையை எமிரேட் விமான நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

அடுத்த வரும் பெப்ரவரி மாதம் தொடங்கவுள்ள இந்தப் புதிய சேவைக்கான முன்பதிவு ஏற்கனவே எமிரேட்ஸ் ஏயர் லைன்ஸ் இணையத்தளம் மூலம் தொடங்கி விட்டதாக வும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.



இதற்கு முன்னதாக, சிங்கப்பூரில் இருந்து நியூயோர்க் நகருக்கு சுமார் 19 மணித்தியாலங்கள் பறந்து செல்லும் விமானச் சேவையைப் பெற்றோல் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி, சிங்கப்பூர் ஏயர்லைன்ஸ் நிறுவனம் கடந்த 2013 ஆம் ஆண்டில் நிறுத்தி விட்டது. இதேவேளை– இடையில் எங்கேயும் தரை இறங்காமல் டுபாயில் இருந்து புறப்பட்டு பனாமா நகர் வரை சுமார் 17 மணித்தியாலங்களும், 35 நிமிடங்களுக்கும் பறந்து செல்லும் இந்தப் புதிய விமானச் சேவை விரைவில் உலகின் நெடுநேர இடைநில்லா விமானச் சேவையாக சாதனை படைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரேஸிலில் துப்பாக்கிச்சூடு 19 பேர் சாவு!

சாபாவ்லோ,ஓக.17

வன்முறைக்கு எதிரான பல நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வரும் பிரேஸில் நாட்டில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 பேர் சாவடைந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அந்த நாட்டின் மிகப்பெரிய நகரமான சா பாவ்லோவில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை [illegible] (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று கொடியேற்றம் காணும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன்

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபரா சக்தியான அம்பிகை தம்மை வழிபட்டு நிற்கும் அடியவர்களின் துன்பதுயரங்களை எல்லாம் நீக்கும் பொருட்டு ஸ்ரீ துர்க்கை அம்மன் அம்சமாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆலயமாகிய தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று கொடியேற்றம்.

சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கும் அடியார்களின் நியாயமான வேண்டுதல்களையெல்லாம் அதாவது நேர்த்திக் கடன்களையெல்லாம் பூர்த்தி செய்து அவ்வப்போது அருள் சுரந்து காக்கும் அம்பிகையாக இந்தத் தெல்லிப்பழை நகரிலே குடியிருக்கும் அம்மனின் அருட்சக்தி மிக மேன்மையானது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தின் மன்மத ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய ஸ்ரீ துர்க்கை அம்மன் நம்பிவந்து வழிபாடியற்றிடும் அடி யார்களை ஒருபோதும் கைவிட்டுவிடமாட்டாள். முற்றாக நம்பினால் நிச்சயம் அருள் கிடைக்கும்.

இந்தத் தெல்லிப்பழை நகரம் புனிதமான அறிஞர்கள் பலர் வாழ்ந்த ஒரு புண்ணிய பூமியாகும். துர்க்கா துரந்தரி என்றும் சிவத் தமிழ்ச் செல்வி என்றும் நம்மவர்களால் விதந்துரைக்கப்பட்டவரான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்ந்து மறைந்த மேதையாவார். அவருடைய தன்னலமற்ற சேவையும் பரந்து விரிந்த மனப்பான்மையும் யாரையும் புண்படுத்தாத இன்னுரையும் அவருக்கேயுரித்தான ஒன்றாகும். அன்னாரின் பரந்துபட்ட உடலுழைப்பினாலே விரிவாக்கம் பெற்ற இந்த ஆலயம் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் வழிநடத்தலிலே இப்பொழுது நிர்வகிக்கப் பெற்று சிறந்த முறையிலே விளங்குவது குறிப்பிடத்தக்கது.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்றபடி இந்தத் தெல்லிப்பழை நகருறையும் ஸ்ரீ துர்க்கை அம்மனுடைய மன்மத ஆண்டுக்கான திவ்ய பெருந்திருவிழா இன்றுமுதல் தொடர்ந்து 12 நாள்களுக்கு வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.



ஒவ்வொருநாளும் ஒவ்வொரு விதவிதமான சிறப்பு அலங்காரத்துடனே வெவ்வேறு வாகனங்களில்அம்பாள்திருவீதிவலம்வருங்காட்சி பக்தி பூர்வமானது.

தெய்வீகமான சிறப்பம்சம் பொருந்திய இந்தத் துர்க்கை அம்மனை வேண்டி வழிபட்டால் திருமணமாகாதவர்களுக்கு விரைவில் விவாகம் கைகூடிவரும் என்று சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் தவறாமல் நெய் விளக்கேற்றி விரதங்காத்து பூஜை ஆராதனைகளைக் கண்டு தரிசித்து வணங்கி வந்தால் திருமணம் நிச்சயமாகும்.

அதன் காரணமாக இந்த ஆலயத்தில் செவ்வாய்க்கிழமைகளில் அதிக எண்ணிக்கையிலான இளமங்கையரும் ஆடவர்களும் ஒன்றுகூடி வழிபாட்டில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. அது ஒருபுறமிருக்க கோயிலுக்கு வருகின்ற அம்பிகையின் பக்தர்களுக்கு அன்னதானமும் சிறப்புற வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தெல்லிப்பழை துர்க்கை அம்மனுடைய திருவிழா காண்பதற்கு யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார் பெருமக்கள் இங்கே வந்து கூடுவர். அம்மனுடைய திருஅலங்காரம் மிக்க அழகாக இருக்கும்.

மேலும், திருமஞ்சத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்று பற்பல விசேட திருவிழாக்கள் அடியார்களின் வேண்டுதல் கருதி மிகவும் விடேமாக நடத்தப்படுகின்றன. அதனால் அம்பிகைக்கு நிகழ்கின்ற அற்புதத் திருவிழாவையும் விசேட பூஜை அலங்காரங்களையும் பார்த்து, உண்மையான பக்தியோடு வணங்கி, நாமும் வாழ்ந்து மற்றவர்களை யெல்லாம் வாழவைத்து நன்றியுணர்வோடு அம்மனை வழிபட்டு உய்தி பெறுவோமாக.

> "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தின் மன்மத ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய ஸ்ரீ துர்க்கை அம்மன் நம்பிவந்து வழிபடும் அடியார்களை ஒரு போதும் கைவிட்டுவிடமாட்டாள்.

# செலவு குறைந்த காப்புறுதித் திட்டம்



நுண் கடன் பெறுவோரை பாதுகாக்கும் வகையிலான புதிய செலவு குறைந்த காப்புறுதித் திட்டம் ஒன்றை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

செலிங்கோ காப்புறுதி மற்றும் பிமா என்பனவற்றுடன் இணைந்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

விபத்து மூலமான மரணம் அல்லது நிரந்தர அங்கவீனம், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவதால் வருமான இழப்பு மற்றும் மரணச் செலவு என்பனவற்றுக்குரிய காப்புறுதிகளை வழங்கும் வகையில் இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது.

மாதாந்த சந்தாவாக 150ரூபா, 300ரூபா மற்றும் 600ரூபாவைச் செலுத்தி முறையே வெள்ளி தங்கம்மற்றும்பிளாற்றினம்வகைகாப்புறுதிகளை பெற்று இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

இவற்றுக்கான காப்புறுதித் தொகை முறையே ஒரு மில்லியன், 2மில்லியன் மற்றும் 4மில்லியன் ரூபாய்களாக இருக்கும். ஆயுள் காப்பாக முறையே 50ஆயிரம், ஒரு லட்சம் மற்றும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அமைந்திருக்கும் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

நுண் தொழில் முயற்சிப் பிரிவில் உள்ள எமது வாடிக்கையாளர்களை பாதுகாப்பதிலும் அவர்களது நலன்களிலும் நாம் எந்தளவு அர்ப்பணத்துடன் பணியாற்றுகின்றோம் என்பதற்கு மற்றுமோர் உதாரணமாகும் என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (தனியார் வங்கி பிரிவு) சந்தனகுணசேகர.

இன்று நுண் கடன் பெறுபவர்கள் இன்னும் சில வருடங்களில் சரியான ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சியாளர்களாக வளரலாம். கொமர்ஷல் வங்கி அந்த ஆதரவை வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

காப்புறுதிகளை செலிங்கோ காப்புறுதி நிறுவனம் வழங்கும். மெல்விக் லங்கா நிறுவனம் விற்பனை பிரிவை கையாளும், இந்த நிறுவனம் நடமாடும் காப்புறுதிகளை வழங்கும் ஒன்றாகும்.

தொழில்நுட்ப நடைமுறை மற்றும் உரிமைகோரல் நிர்வாகம் என்பனவற்றையும் இந்த நிறுவனமே கையாளும்.

இந்தக் காப்புறுதிக்கான அதிகரிக்கும் தேவையை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படும் இடங்களில் இதன் அதிகாரிகள் வங்கிக் கிளையில் நிலைநிறுத்தப்படுவர் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

இந்தக் காப்புறுதியை பெற்றுக்கொள்ளும் ஒருவர் விபத்தில் சிக்கியோ அல்லது நோய்வாய்ப்பட்டோ வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகின்றபோது நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா முதல் மூவாயிரம் ரூபா வரை செலவுக்காக வழங்கப்படும்.

ஆகக் கூடிய பட்சம் இருபது தினங்களுக்கு வழங்கப்படும். காப்புறுதியைப் பெறும் ஒருவர் விபத்தின் மூலம் மரணிக்க நேர்ந்தால் மரண செலவுக்காக 25 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை வழங்கப்படும்.

மேலும் அவருடைய காப்புறுதியில் எஞ்சியுள்ள பணத்தைக் கொண்டு கடன் மீதியும் அறவிடப்படும்.

கொமர்ஷல் வங்கியில் நுண் சேமிப்புஅல்லதுகடன்பெறும்நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். வங்கியின் பேங்கா இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் இவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

இந்தச் சேவைகளின் ஒரு விரிவாக்கமாகவே புதியஅறிமுகம் அமைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கி நாடு முழுவதும் 243 கிளைகளுடனும், 613 ஏ.ரி.எம் வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. இதுவே நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியாகும்.

2014ஆம் ஆண்டில் மிகச் சிறந்த தனியார் வர்த்தக முத்திரையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2015ல் பினான்ஸ் ஆசியாவால் இலங்கையின் மிகச் சிறந்த வங்கியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி ஏனைய பல சர்வதேச சஞ்சிகைகள் மூலமாகவும் கடந்த பல ஆண்டுகளில் இலங்கையின் தலை சிறந்த வங்கி என தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வாத்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதாபிமானம் மறைந்து விட்டதா ?

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று வயது குழந்தைக்கு தொடர்ந்து 15 தினங்களாக இருமல் காணப்பட்டதால் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற குழந்தைகள் கிளினிக்கில் பார்வையிட்ட குழந்தைகள் வைத்திய நிபுணர் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று எக்ஸ் – றே எடுக்குமாறு கூறியுள்ளார். இதன்படி நாம் குழந்தையை அம்பலன்ஸில் யாழ்.போதனா வைத்தியசாலை எக்ஸ்.– றே பிரிவுக்குக் கொண்டு சென்ற போது சாவகச்சேரி வைத்திய சாலையிலிருந்து வரும் நோயாளர்களுக்கு இங்கு எக்ஸ்.–றே எடுப்பதில்லை எனவும் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் கூறியுள்ளனர்.

அதனால் நாம் நோயாளியான பிள்ளையைத் தூக்கிக் கொண்டு மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளிகளுக்கு வாரத்தில் இரு தினங்கள் மட்டும் எக்ஸ்–றே எடுப்பதாகவும் அதனால் அடுத்த செவ் வாய்க்கிழமை கொண்டு வருமாறும் கூறியுள்ள னர். அதனால் குழந்தையை மீண்டும் சாவகச்சேரி வைத் தியசாலையில் அனுமதித்துள்ளோம்.

கடந்த மூன்ற வாரமாகத் தொடர்ந்து இருமலால் மூச்சு விடக் கஸ்டப்படும் மூன்று வயதுக் குழந்தையை எக்ஸ்–றே எடுப்பதற்கு அந்தத் தொழிலில் உள்ளவர்கள் காட்டும் அக்கறையின்மையை என்னவென்று சொல்வது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பளை, மந்திகை ஆதார வைத்தியசாலைகளிலும் யாழ்.போதனா வைத்தியசாலையிலுமே எக்ஸ் – றே வசதிகள் உள்ளன. சாவகச்சேரி வைத்தியசாலையில் எக்ஸ்.–றே கருவிகள் உள்ள போதிலும் அங்கு தொழில்நுட்பவியலாளர் இல்லாததால் மூன்று மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த மூன்று வைத்தியசாலைகளின் எக்ஸ்.–றே பிரிவில் கடமையாற்றுபவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து கடமை செய்யாமல் சட்டப்படி வேலை செய்ய முனைவது மனிதாபிமானமற்ற செயலாக காணப்படுகிறது. மூச்சுவிடக் கஸ்டப்படும் மூன்ற வயதுக் குழந்தையை எக்ஸ்.–றே எடுக்குமாறு யாழ்..போதனா வைத்தியசாலை குழந்தைகள் வைத்திய நிபுணரின் பணிப்பை அதே வைத்தியசாலையில் கடமையாற்றபவர்களே மீறுவது ஏழைப் பெற்றோர்களாகிய எமக்குப் பெரும் வேதனையளிக்கிறது.

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களும் வசதி படைத்தவர்கள் இல்லை எம்மைப் போன்ற ஏழைக் குடும்பங்களும் உள்ளனர் என்பதை எவரும் மறக்கக்கூடாது.

– பாதிக்கப்பட்ட பெற்றோர் –
சாவகச்சேரி

## கற்கள் அப்புறப்படுத்தப்படுமா?

யாழ்.பாங்ஷால் வீதியில், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் தெற்குப் புற வீதியில் குவிக்கப்பட்டுள்ள கற்களினால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை அனுப வித்து வருகிறார்கள். இந்தக் கற்கள் யாழ்.பாங்ஷால் வீதியின் முக்காற் பங்கை ஆக்கிரமித்துள்ள துடன் கற்கள் சரிந்து பரவி முழு வீதியையும் ஆக்கிரமித்துள்ளன. இந்தச் சிறுகற்கள் இந்த வீதியில் குவிக்கப்பட்டு சுமார் ஒருவாரம் முடிவடைந்துள்ள போதிலும் உரியவர்களால் எந்தவித வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட வில்லை. எனவே குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தைக்கு பொது மக்கள் செல் லும் முக்கிய வீதிகளில் ஒன்றாக இந்த வீதி உள்ளமையால், பொதுமக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு இந்தக் கற்களை அப்புறப்படுத்து வதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரியுள்ளனர். உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?





திலீப், குருநகர்.

## குப்பிளான் பஸ்சேவை ஒழுங்காக இடம்பெறுமா?

கடந்த 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 06.10 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளான் செல்லும் தனியார் பஸ் சேவை இடம்பெற வில்லை.இதனால் 22க்கு மேற்பட்ட பயணிகள் பஸ்ஸை எதிர்பார்த்து காத்திருந்தனர். அப்போது மாவிட்டபுரத்துக்கான பஸ் ஆயத்த நிலையில் இருந்தது.அதில் கடமையில் இருந்த நடத்துநர் "குப்பிளான் பஸ்போட்டுது, இதில் ஏறுங்கோ" எனக் கூறிக்கொண்டிருந்தார். நேரக் காப்பாளரினால் குப்பிளான் பஸ் வரும் எனவும், வராவிடின் வேறு ஒரு பஸ் அதற்கு பதிலாக சேவைக்கு விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தனர். நேரக் கணிப்பாளர், ஏனைய நடத்துநர்களை குப்பிளான் சேவைக்கென வேறொரு பஸ்ஸை அனுப்புமாறு கேட்ட போதிலும் அது சாத்தியமாகவில்லை. இதனால் குப்பிளான் பஸ்ஸுக்கு காத்திருந்த பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். மேலும் அன்று காலை 05.40 மணிக்கு குப்பிளானில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்சேவையும் இடம் பெறவில்லை. அன்று காலையும், மாலையும் ப்ஸ்ஸுக்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந் தனர். அதில் நானும் ஒருவன். இது தொடர்பாக எத்தனையோ தடவைகள் எடுத்துக் கூறிய போதிலும் முறைப்பாடுகள் செய்த போதிலும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. எனவே இதற்குப் பொறுப்பான வர்கள் இதில் அக்கறை காட்டுவதோடு குப்பிளான் பஸ் சேவை ஒழுங்காக இடம்பெறுவதற்கான ஒழுங்குகளையும் மேற் கொள்ள வேண்டும்.

– ப்ா.தமிழ்மாறன்,குப்பிளான்.

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# வாக்களியுங்கள்

வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று தேர்தல்கள் திணைக் களத்தினர் தெருத் தெருவாக ஒலி பெருக்கியில் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு தேர்தலுக்காக பல மில்லியன்கள் செலவு செய்யப்படுகின்றது. அந்த மில்லியன் கணக்கான பணம் தேர்தல்கள் திணைக்களத்துக்கு எப்படி வருகின்றது? எங்களுடைய வரிப்பணம்தான் அது. ஆக எங்கள் வரிப்பணத்தில் நடக்கும் தேர்தலில், எங்களை ஆளப் போகின்றவர்களை நாங்கள் தேர்வு செய்யாமல் வேறு யாரைத் தேர்வு செய்வது ? அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் தொடர்பில் விருப்பு - வெறுப்பு இருக்கலாம். வாக்களிக்காமல் இருப்பதால், தேர்தல் நடக்காமல் இருக்குமா ? தேர் தல் நடக்கும், முடிவு வரும். வாக்களிக்காமல் விடுவதன் மூலம் எங்களுக்கு விருப்பமில்லாதவர்கள் கூட வரக் கூடிய சாத்தியங்கள் உண்டு. எனவே அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

எங்கள் வரிப்பணத்தை நாங்கள் வீணடிக்கக் கூடாது. இவ்வளவு மில்லியன்கள் செலவு செய்து நடக்கும் தேர்தலில், நாங்கள் பங்காளர்களாக இருக்க வேண்டும். வடக்கில் கடந்த காலங்களில் இடம் பெற்ற தேர்தல்களில், தேர்தல் வன்முறைகள் தலைவிரித்தாடின. அந்தத் தேர்தல் வன்முறைகளைத் தூண்டியவர்களை மக்களுக்கு நன்கு தெரியும். அதனால், அவர்களுக்குப் பதிலடி கொடுப்பதற்காகவே, வீரியத்துடன் தமிழ் மக்கள் கடந்த காலத் தேர்தல்களில் அணி திரண்டு வாக்களித்திருந்தார் கள்.

இப்போது அவர்கள் ஆட்சி அரங்கிலிருந்து அகற் றப்பட்டிருக்கின்றார்கள். தேர்தல் சுமுகமாக நடக்கின்றது. தமிழரசுக் கட்சியின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் மற்றும் நீர்வேலியில் தமிழரசுக் கட்சியின் ஆதர வாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தவிர வேறு வன்முறைகள் இல்லை.

வாக்காளர்களிடம் வாக்களிக்க வேண்டும் என்ற உத்வேகம் வேண்டும். எங்களுக்கு எதுவும் கிடைக்க வில்லை என்று சோர்வு அடையக் கூடாது. தோற் கடித்தவர்களை, வாக்குகளினால் தோற்கடித்து புதியதொரு தளத்தில் நாம் இப்போது நின்று கொண்டிருக்கின்றோம். இந்தப் புதிய தளத்தில் எங்களுக்கான தீர்வுகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

உணர்சிக் கோஷங்களைத் தூக்கி எறிந்து விட்டு யதார்த்தக் களத்தில், பொறுமையாக இருந்து நிதானமாகச் சிந்தித்தால் புரியும். புலம்பெயர் நாடுகளில் இருப்பவர்கள், அங்குள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி எதுவும் சொல்ல முடியும். அவர்கள் சொல்வது எல்லாம் இங்கு நடக்க முடியுமா ? நடப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா ?

எனவே, இங்குள்ள வாக்காளர்களுக்குத்தான் எது சாத்தியம் என்பது புரியும். சாத்தியமானவற்றை யார் தங்கள் தேர்தல் அறிக்கையில் முன்வைத்திருக் கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டு சரியான வர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இன்று ஒரு நாள் வாக்களிக்கத் தவறுவோமாக இருந் தால் அல்லது தவறானவர்களுக்கு வாக்களிப் போமாக இருந்தால் இன்னமும் 5 ஆண்டுகளுக்கு எங்களால் எதுவும் செய்ய முடியாது. இன்று ஒரு நாள் வாக்களிப்பதற்கு கொஞ்ச நேரம் ஒதுக்கத் தவறினால், 5 ஆண்டுகள் பேசாமல் இருக்க வேண்டியதுதான் நிலைமையாக இருக்கும்.

எனவே எத்தகைய வேலைகள் இருந்தாலும், பஞ்சியை விடுத்து சில நொடிகள் ஒதுக்கி, வாக் களிப்பு என்ற கடமையை இன்று நாம் மேற்கொள்ள வேண்டும். வாக்களிப்புக் கூண்டுக்குள் ஒரு நொடியில் நீங்கள் போடும் புள்ளடிதான் நாளைய உங்கள் தலைமை யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றது.

எனவே அந்தப் புள்ளடியின் பெறுமதியை உணர்ந்து வாக்களியுங்கள். சரியானவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மகா தவறு, வாக்களிக்காமல் விடுவது!

இலங்கை நாட்டில் வாக்களிக்கும் உரிமை கொண்ட ஒவ்வொரு குடிமகனும், குடிமகளும் இன்று இந்த நாட்டின் தலைமகன் அல்லது தலைமகள் என்ற நிலைக்கு உயர்த்தப்படுகின்றார். அவ்வாறான உயர்வை, மதிப்பை அவர்கள் பெற்றிருப்பதற்கு அவர்கள் கையில் வைத்திருக்கும் வாக்குச் சீட்டே காரணம். ஏனென்றால் அந்த ஒரு வாக்குச் சீட்டின் மூலம் இந்த நாட்டின் எதிர்காலத்தை - வரும் ஐந்து ஆண்டுகாலத்துக்கு நம்மை ஆளப்போகின்றவர்களை நிர்ணயிக்கும் அசைக்க முடியாத அதிகாரத்தை அவர்கள் பிரயோகிக்கப் போகிறார்கள் என்பதே!

எனவே அந்த வாக்குச் சீட்டின் மகிமை, பெருமை எல்லாவற்றுக்கும் மேலாக அதன் பெறுமதி அளப்பரியது -- விலைமதிப்பில்லாதது.

இந்த வாக்குச் சீட்டைத் தங்களுக்குப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஏறத்தாழ ஒரு மாத காலம் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் சுயேச்சைக் குழுக்கள், சுயேச்சைவாதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் படாதபாடுபட்டுள்ளார்கள். வானத்தை வில்லாக வளைப்பேன் என்போரும் - மண்ணைக் கயிறாகத் திரிப்பேன் என்போரும் இல்லாது போனாலும், மக்களின் பிரச்சினைகளை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துப் பிடுங்கி, அவற்றுக்குத் தாம் வழங்கப்போகும் தீர்வுகளை பலரும் பலவிதமான முறைகளில் முன்வைத்திருக்கிறார்கள் -- விளாசித் தள்ளியிருக்கிறார்கள்.

முன்பு ஒருபோதும் நம்மைக் கண்டால் சிரிக்காதவர்கள்கூட, கடந்த பல நாள்களாக முகமெல்லாம் பல்லாக சிரித்தார்கள். வளைந்து நின்று கும்பிடுபோட்டார்கள். தமக்குள்ள தகுதிகள் மற்றும் தராதரங்கள் பற்றியெல்லாம் விளம்பரங்களை ஊடகங்களில் வெளியிட்டார்கள்.

தனிப்பட்டவர்கள்தான் இப்படியென்றால் கட்சிகளும், குழுக்களும்கூட நாட்டுக்கும், மக்களுக்கும் தாம் வருங்காலத்தில் செய்யப்போகும் சேவைகளையும், பணிகளையும் பலவிதமாக வழங்கியுள்ளார்கள். நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை எவ்வாறெல்லாம் மக்கள் சார்பில் தாங்கள் எதிர்கொள்வார்கள், தீர்த்து வைப்பார்கள் என்பதை கூட்டங்கள் போட்டும் வீடுகளுக்குச் சென்றும் விளக்கியுள்ளார்கள். விளம்பரங்கள், வியாக்கியானங்கள் என்ற இவர்களின் கெடுபிடிகளால் நாடு கடந்த பல நாள்களாக அல்லோல கல்லோலப் பட்டுள்ளது. இவை மட்டுமன்றி, சில இடங்களில் ஏட்டிக்குப் போட்டியாக கூட்டங் களும் சிலசமயம் அடிபாடுகளும் ஏன் துப்பாக்கிச் சூடுகளும் கூட நடந்துள்ளன.

இவ்வளவும் நடந்து முடிந்துள்ள நிலையில் வாக்காளப் பெருமக்கள் தமது தீர்ப்பை இன்று வழங்குவதற்கு ஆயத்தமாகியுள்ளார்கள். நாட்டு மக்கள் இன்று தம் வாக்குச் சீட்டின் மூலம் வழங்கப்போகும் இந்தத் தீர்ப்பானது சாதாரணமானதன்று -- மகத்தானது. நாட்டின் தலைவிதியை மட்டுமல்ல எமது எதிர்காலம் எவ்வாறு இருக்கும், இருக்க வேண்டும் என்பதையும் மக்கள் தீர்மானிக்கும் சந்தர்ப்பமாகும் இது.

எனவேதான் வாக்குரிமை பெற்றுள்ள அனைவரும் அதனைக் கட்டாயம் இன்று பயன்படுத்தியாக வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. வாக்களிப்பை, சிலர் ஏனோ தானோ என்று நினைப்பதாகத் தெரிகின்றது. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கட்சிகள் மீது அல்லது கட்சிப் பிரமுகர்கள் மீது குறைபாடு -- வெறுப்பு அல்லது வேறு காரணத்தாலோ எதிர்ப்புணர்வு இருக்கலாம். அது வேறு விடயம், ஆனால் வாக்குரிமையைப் பயன்படுத்தாது விடுவது மகா தவறு.

மலையகத்தில் குடியுரிமையுடன் வாக்குரிமையும் பறிக்கப்பட்டவேளை அந்த மக்கள் பட்ட வேதனைகளையும் அதனால் உண்டான விளைவுகளையும் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். அந்த உரிமையை மீண்டும் வென்றெடுக்க அவர்கள் நடத்திய போராட்டங்கள் அனந்தம். எனவே, வாக்குரிமை இல்லாதவர்களுக்கே அதன் வலி மட்டுமன்றி, வலிமையும் தெரியும்.

எனவே வாக்களிக்காமல் விடும் எண்ணம் வாக்காளர் எவருக்கும் ஏற்படலாகாது. வாக்களிக்காமல் விடும் சந்தர்ப்பத்தில் கள்ளமாக வாக்களிப்பவர்களுக்கு அது வாய்ப்பாகிப் போய்விடும்.

ஆகையால், இன்று நடக்கும் தேர்தலை உன்னதமான ஒரு சந்தர்ப்பமாகக் கருதி வாக்குரிமையுள்ள அனைவரும் கூடிய வரை நேரகாலத்துடன் தமக்குரிய வாக்குச் சாவடிகளுக்கு, அவசியமான ஆவணங்களுடன் சென்று வாக்களிக்க வேண்டும். அது நமக்கும் நாட்டுக்கும் நல்ல எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இருக்க வேண்டும்.

# மன்னாரின் கண்ணியத்தைச் சிதைக்கும் போதைப் பொருள்களின் புழக்கம்

மதுமிதன்

இலங்கையின் வட பகுதியில் அமைந்திருக்கும் ஆரவாரமில்லாத அமைதியான மாவட்டங்களில் ஒன்று தான் மன்னார். மேற்கெல்லையாக இந்துமா சமுத்திரத்தையும் சூழவுள்ள ஏனைய எல்லைகளாக கிளிநொச்சி, வவுனியா மற்றும் புத்தளம் மாவட்டங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறப்பையும் இது உடையது.



இலங்கையின் பூகோள அமைவிடம் தொடர்பாக பேச முற்படும் போது மன்னாரைத் தவற விட்டுக் கதைக்க முடியாது. ஏனெனில் இந்திய உபகண்டத்துக்கும் இலங்கைக்குமான மிகக்கிட்டிய தூரம் தலைமன்னாரை வைத்தே கணிக்கப்படுகின்றது. தலைமன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, மன்னார், முருங்கன், மடு, சிலாவத்துறை, அடம்பன், இலுப்பைக்கடவை, விடத்தல்தீவு போன்றன மன்னார் மாவட்டத்தின் முக்கியமான இடங்களில் சிலவாகும்.

இதிகாச காலம் தொட்டு இன்றைய காலம்வரை மன்னாரின் சிறப்பு அதிமுக்கியமானதாகும். சீதையை மீட்பதற்காக இராமபிரான் வானரப் படையின் உதவியால் கட்டிய இராமர்பாலம் (ஆதாம் பாலம் ) தொடக்கம் தேவார முதலிகளான ஞான சம்பந்தரும், அப்பரும் பதிகம் பாடிய திருக்கேதீச்சரமும், மருத மரங்கள் சூழப்பெற்ற மடுத்திருப்பதியும், அல்லிராணிக் கோட்டையும், இலங்கையின் முதலாவது ஆளுநரான பிரட்டிக் நோத்தின் மாளிகையும், மன்னார் கோட்டையும் என வரலாறு விட்டுச்சென்ற சிறப்பிடங்கள் இன்னமும் மன்னாரில் நிறையவே இருக்கின்றது. இவை மன்னாரின் வரலாற்றுச் சின்னங்களாகும். மன்னாரின் வரலாற்றுச் சிறப்பை எழுதுவதென்றால் இவ்வாறு பல பத்திகள் எழுதிக் கொண்டே செல்லலாம். எனினும் இந்தக் கட்டுரையின் நோக்கம் அது வல்ல.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பும் பொருளாதார சிறப்பும் நிறைந்தது மன்னார் மாவட்டமாகும். முத்துக்களுடன் பல்வேறு வகையான மீன்கள் விளையும் மன்னார் கடல், எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

வேதசாட்சிகளின் விசுவாசத்தால் வேரூன்றிய கிறிஸ்தவ மதமும், அன்பே சிவம் என்று உரைத்த இந்து மதமும், அல்லாவின் அருமறை தந்த போதனையை ஏற்று முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் ஆசாரம் மிக்க வாழ்வை முன்னெடுக்கும் மாவட்டமாக இது திகழ்கின்றது.

ஆனால் இந்தக் கண்ணிய வாழ்வையும், கலாசார சிறப்பையும் சீரழிக்கவென்று புறப்பட்டுள்ளது புதியதொரு பூதமொன்று. தமிழர் வாழ்வியலை சிதைக்கவென்று அடிக்கடி கிளம்பும் கிறீஸ் பூதங்கள் போன்றே இதுவும் அச்சம் தருகின்ற ஒரு விடயமாக உருப்பெறுகின்றது. அது அண்மைக் காலமாக அதிகரித்துவரும் போதைப் பொருள்களின் புழக்கமாகும்.

ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் வரும் செய்திகள் இவற்றை உறுதி செய்கின்றன. ஹனபிஸ் சற்றய்வா எல் என்ற தாவரவியற் பெயரைக் கொண்ட கஞ்சா, றை சற்றய்வா மொபீன் என்ற இரசாயன பெயரைக் கொண்ட ஹெரோயின், சட்ட விரோத மதுபானமான கசிப்பு, புகை யிலைப் பொருள்கள் மற்றும் போதைப் [illegible] போன்றவற்றின் பாவனையும் கடத்தலும் மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுகின்றன. இவற்றுள் கஞ்சாவும் ஹெரோயினும் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்தப்படுகின்றன. இவை இரண்டும் ஏனைய போதைப் பொருள்களை விடவும் மிகவும் ஆபத்தானவை. ஒருமுறை பாவித்தவரை இதற்கு அடிமையாகச் செய்யும் இயல்பு இவற்றுக்கு உண்டு. அதிலும் ஹெரோயின் இன்னும் ஆபத்தானது. இவற்றின் பயங்கரத் தன்மையை அறிந்துதான் சட்டத்தால் இவற்றை உடைமையில் வைத்திருப்போருக்கு எதிராகக் கடுமையான தண்டனைகள் நடை முறைப் படுத்தப்படுகின்றன. இரண்டு கிராமங்களுக்கு மேற்பட்ட நிறையுடைய ஹெரோயினை வைத்திருப்போருக்கு மரண தண்டனையும் விதிக்கப்படுகின்றது.

ஆனால் இவ்வாறான போதைப் பொருள்கள் மன்னாரில் தாராளமாக புழங்குவதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது இந்தக் குற்றங்களுடன் தொடர்புடைய பெண்கள் உட்பட பலர் போதைப்பொருள்களுடன் நாளாந்தம் தம்மால் கைது செய்யப்படுவதாகவும் எனினும் இந்தப் போதைப்பொருள்கள் பெருமளவில் மன்னாருக்குள் கொண்டு வரப்பட்டு பதுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிலிருந்தே கடல் மார்க்கமாக இவை கொண்டுவரப்படுவதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மன்னார் மாவட்டத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு இவை மீன்கள் கொண்டு செல்லப்படும் குளிரூட்டி வாகனங்களிலும் ஏனைய வழிகளாலும் கடத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது.

தற்போது கடற்றொழிலில் பருவ நிலையாலும், இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பாலும் ஏற்பட்டுள்ள மந்தநிலையும், போதைப் பொருள் பாவனை அதிகரிப்புக்கு ஒருகாரணமெனக் கூறப்படுகிறது. சிறிய கஞ்சாப்பொதி ஒன்றை கைமாற்றுவதற்கு பத்தாயிரம் ரூபா தொடக்கம் பதினையாயிரம் ரூபா வரை வழங்கப்படுவதாக தெரிய வருகிறது. சிறிய நேர இடைவெளி ஒன்றில் கிடைக்கும் பெருந்தொகைப் பணத்துக்கு ஆசைப்பட்டும் கடத்தல் தொழிலில் பலர் ஈடுபடுகிறார்கள்.

நீதிமன்ற வட்டாரங்களின் தகவலின் அடிப்படையில் நாளொன்றுக்கு சராசரியாக இரண்டு வழக்குகள் போதைப்பொருள்கள் தொடர்பில் நீதிமன்றுக்கு கிடைக்கின்றன. அத்துடன் தற்போது சட்டவிரோத மதுபான உற்பத்தியும் அதிகரித்துள்ளதாகவும் அறிய வருகின்றது. கடந்த காலத்தில் மதுவரி பரிசோதகர்களினாலும, பொலிஸாரினாலும் போதைப்பொருள்கள் தொடர் பான குற்றங்களுடன் தொடர்புபட்ட பலர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களில் சிலருக்கு சிறைத்தண்டனையும் ஒரு சிலருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. ஒரு சிலரை மன்னார் தோட்டவெளியில் அமைந்துள்ள மறுவாழ்வு மையத்துக்கும் நீதிமன்றம் ஆற்றுப்படுத்தியுள்ளது.

கஞ்சா வழக்கில் சிக்கி நீதிமன்றத்துக்கு வரும் சந்தேகநபர்களில் பலர் ஆரம்பத்தில் தம்மீதான குற்றச்சாட்டை மறுக்கின்றனர். பொலிஸார் வேண்டுமென்றே கஞ்சாவை தமது உடைமையில் போட்டு தம்மை கைது செய்வதாக குற்றம் சுமத்துகின்றனர். எனினும் தொடர்ந்து வழக்காட முடியாத நிலையில் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு தலைமன்னார் கிராமத்தில் கஞ்சாவைத் தேடிச்சென்ற பொலிஸார் சந்தேகத்தின்பேரில் இருவரை கடுமையாக தாக்கியதுடன் மறுநாள் அவர்களை சந்தேகநபர்களாக்கி நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்கள் வழக்கு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் போது நீதிமன்றில் மயங்கி விழுந்ததும் அதன்பின்னர் தாம் தாக்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் உச்ச நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்தமையால் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட அறுவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருள்கள் கடத்தல் பின்னணியில் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் சிலரின் பங்களிப்பும் இருப்பதாகத் தெரியவருகின்றது. அவர்களுக்கு சில பொலிஸ் அதிகாரிகளும் உடந்தையாகச் செயற்படுவதாகவும் அவர்களின் விடயங்களை கண்டும் காணாமலும் கையாளுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறு இருப்பினும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பல்வேறு விதமான நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் எமது இனம் இந்தப் போதைவஸ்து கலாசாரத்துக்கு பலியாகி விடக் கூடாது. இக்கொடிய நோயிலிருந்து எமது சந்ததியை பாதுகாக்க நாமெல்லாரும் முன்வர வேண்டும். அதற்காக எல்லாரும் ஒன்று பட்டுச் செயற்படவேண்டியது அவசியமாகும். அது காலத்தின் கட்டாயமாகும். அல்லது போதைப் பிடியில் சிக்கி சின்னாபின்னாமாகிக் கொண்டிருக்கும் மேற்குலக நாடுகள் போல எமது பிரதேசமும் கலாசார சீரழிவுக்கும் நெறி மறை பிறழ்வுக்கும் உட்பட்டு வருந்தி வாழ்விழக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை.நாகமணி.
கோபாலகிருஷ்ணன்

# சரித்திரமாக மாறிவிட்ட அதிபர் கணேஸ்வரன்



புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி வித்தியாவின் வன் கொடிய மரண நிகழ்வை சகிக்க முடியாமல் 41 நாள் சோறு உண்ணாது விரதம் இருந்து உடல் தளர்ந்து உயிர் துறந்த உத்தம ஆசான் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்". என்பது தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டி தந்த தெய்வீக வாசகம். மானிட உடல் தாங்கி மண்ணில் பிறந்த அனைத்து மனித உயிர்களையும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுத்து நல்வழி காட்டுபவர்கள் அன்னை, பிதா, குரு, தெய்வம் ஆகியோராவர். உயிர் உடல் அன்னை தந்தையால் தரப்படுகின்றது. தாய் தந்தை எழுத்தறிவைப்பெற குரு (ஆசிரியர்)விடம் ஒப்படைக்கின்றனர். கல்வியால் அறிவைப் புகட்டி ஆண்டவன் அருளைப் பெற அருள் வழிகாட்டுகின்ற குருவாக நல்ல ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி மகத்துவமான மாணவர்களை மனித குலம் வாழ்வாங்கு வாழ வழி வகுத்துச் சென்றுள்ளார்கள். ஆசிரியர்களைத் தெய்வமாக மதிக்கின்ற மாணவர்கள் கல்வியில் அதி உன்னத பெறுபேறுகளைப் பெற்றுள்ளமையை உலகச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு புகட்டி நிற்கின்றது. மனிதனை மனிதனாக வாழ வைப்பவர்கள் அன்னை, பிதா, குரு (ஆசிரியர்) ஆகிய மூவருமே.

தாரமும், குருவும் தலை எழுத்துப்படி அமையும் என்பதுபோல், நல்ல ஆசிரியர்கள் ஒரு பாடசாலைக்குக் கிடைத்துவிட்டால் அந்தப் பாடசாலையில் கல்வி பயில்கின்ற மாணவ, மாணவியர்கள் என்ன மாதவம் செய்தனை நெஞ்சே என்றவாறு புளகாங்கிதம் அடைந்து கல்வியில் முன்னேறுகின்ற நிலை ஏற்பட்டு அவர்களின் தலை எழுத்தை நிர்ணயித்து விடுகின்றனர். இது பாடசாலைக்கு பெரும் புகழைத் தேடித் தந்து விடுகின்றது. ஆசிரியர்களுக்கான ஒழுக்க நெறி நின்று கல்வி புகட்டுகின்ற ஆசிரியர்கள் குருவடிவாக வந்த தெய்வங்கள். அவர்களிடம் கல்வி கற்கின்ற மாணவ மாணவியர்கள் பெரும் பேறு பெற்றவர்கள்.

ஆசிரியர்களின் சேவை ஒரு மகத்துவமானது என்பதை பல ஆசிரிய தெய்வங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து ஆசிரிய உலகுக்கு வழிகாட்டிச் சென்றுள்ளனர். அந்த வரிசையில் சேர்க்கப்பட வேண்டிய ஒருவர்தான் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் காலமான புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் அதிபர் நயினை சதாசிவம் கணேஸ்வரன் ஆவார்.

நயினாதீவு வீரபத்திரர் சதாசிவம் – சவுந்தரம் தம்பதிகளின் புதல்வனாய் 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி இல் நயினாதீவில் பிறந்து ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாசாலை யிலும், நயினாதீவு மகாவித்தியாசாலையி லும் பயின்று பட்டப்படிப்பை யாழ். பல்கலைக் கழகத்தில் பயின்று புங்குடுதீவு மகாவித்தி யாலயத்தில் ஆசிரியராய், அதிபராய் 18 ஆண்டுகள்



பணியாற்றிய பெருமகன் இல்லற வாழ்வில் இணையாமல் பிரம்மச்சாரிய வாழ்வை மேற்கொண்டு தன்னை முழுமையாக புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் எழுச்சிக்காக அர்ப்பணித்தவர். கல்விப் புலத்தில் கால் பதித்துப் பாடசர்லையின் வளர்ச்சியும் மாணவர்களின் உயர்ச்சியுமே தன் உயிர் மூச்சாகக் கொண்டு அப்பணிக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து குருவடிவாய் வந்த ஆசானைக் கல்விச் சமூகம் இழந்துவிட்டது. மனித நேயமும் ஆன்மிக உந்தலும் அறச்சிந்தனையும் மிக்க ஒரு தெய்வீகச் சேவையாளனைப் "பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே" என்று வாழ்ந்த ஊர்ப் பற்றாளனை நயினை மண் இழந்துவிட்டது.

அமரர் கணேஸ்வரன் ஒரு காந்தீய தத்துவத்தைத் தன்னுள் அடக்கி தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாது நடமாடிய ஒரு இலட்சியவாதி அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன. அஞ்சலி உரைகளில் அமரர் அவர்களின் தூய்மையான பணி செயல்கள் பற்றி கண்ணீர் மல்கப் பலர் எடுத்தியம்பினர். புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர் குழாம் தங்கள் அதிபர் ச.கணேஸ்வரனின் 50ஆவது பிறந்த தினத்தை கடந்த வருடம் கொண்டாடத் தீர்மானித்து அவருக்குத் தெரியாமல் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அவரை கேக்வெட்ட அழைத்த பொழுது அவர் என்னைக் கேட்காமல் உங்களை யார் இந்த ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னது? ஏழைக் குழந்தைகள் பிறந்தநாள் எது என்பதே தெரியாமல் ஒருவேளை உணவுக்கு திண்டாடும் பொழுது நான் எனது பிறந்தநாள் பற்றிச் சிந்தித்தது கிடையாது என்னைவிட்டு விடுங்கள் என்று அன்பாக வேண்டியதுடன். அந்தத் தினத்தில் பிறந்த அந்தப் பாடசாலை மாணவி ஒருவரை அழைத்து வந்து பிறந்த நாள் கேக்கை வெட்ட வைத்தார் என்று ஆசிரியர் ஒருவர் கண்ணீர் மல்க உரையாற்றிய பொழுது பாடசாலை வளாகத்தில் நீக்கமற நிறைந்திருந்த பெற்றோர்கள், பொதுமக்கள், மாணவ, மாணவியர் உள்ளங்களைத் தொட்டுக் கண்ணீர் மல்க வைத்தது. தனக்கென வாழாத பெருநெறியாளன் என்பதை உணர வைத்தது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் முன்பாக உள்ள உணவகம் ஒன்றில்தான் மதிய உணவு (சோறு) சாப்பிடுவதைவழமையாகக் கொண்டிருந்த அதிபர் தனது பாடசாலை மாணவி சிவநாதன் வித்தியா பாடசாலைச் சீருடையுடன் பாடசாலைக்கு வருகை தந்த பொழுது காமக் கொடூரக் கூற்றுவர்களால் வன் கொடுமை மரணம் நிகழ்ந்த நாளில் இருந்து 41 நாள்கள் சோறு உண்ணுவதைத் தவிர்த்து வந்துள்ளார் என்பதை உணவக உரிமையாளர் சொன்ன பொழுது வித்தியாவைப் பெற்றெடுத்த தாய் தந்தை மேற்கொள்ளாத கடும் விரதத்தைப் பாடசாலை அதிபர் கைக் கொண்டுள்ளார் என்பதை உணர முடிந்தது. அன்னை பிதாவை விட குரு தெய்வம் என்ற வேத வாக்கின் தத்துவத்தைச் செயல்வடிவில் உணர்த்திச் சென்ற அகிம்சைவாதி. வித்தியாவின் கொலையாளிகளைக் கொல்வதற்கு தான் ஒரு அலுக்கோசாக மாறவேண்டும் என்று ஒரு பௌத்த பிக்கு அறிக்கைவிட்டார். வித்தியாவின் பாடசாலை அதிபர் அவளைக் கொலை செய்த கூற்றுவர்கள் நீதி தவறாது தண்டிக்கப்பட வேண்டும் என்பதைத் தன்னையே அர்ப்பணித்து விரதம் இருந்து மகாத்மா ஆகிவிட்டது புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் அதிபர் அமரர் ச.கணேஸ்வரனின் தூய ஆன்மா.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு வித்தியாவின் திறமையால் பெறுபேற்றால் தனியான ஒரு சிறப்புக் கிடைக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பு அதிபர் உள்ளத்தில் இருந்திருக்கின்றது. அதனால்தான் பெற்றோர் அவளை யாழ்ப்பாணப் பாடசாலை எதிலாவது சேர்த்துப் படிக்க வைக்கக் கேட்ட பொழுதும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் படிக்கட்டும் என்று கூறி தொடர்ந்தும் கல்வி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். பொதுவாகப் பாடசாலை அதிபர்கள் திறமையான மாணவ மாணவியர்களுக்கு விடுகைப் பத்திரத்தைக் கொடுக்கமாட்டார்கள். ஒரு சில மாணவ மாணவியரின் திறமையில் தான் முழுப் பாடசாலை யின் கல்விச் செயற்பாடுகளும் தங்கி இருக்கின்றது. ஒருசில மாணவ மாணவியரின் திறமைச் சித்தி பாடசாலைக்கும், கிராமத்துக்கும் சிறப்பைத்தரும். இதைக் கருத் தில் கொண்ட புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் கல்வியில் திறமையான மாணவி வித்தியாவை யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்பிக்க பெற்றோர் விரும்பியபோதும் தனது பாடசாலையில் தொடர்ந்து படிக்கட்டும் என்று கூறியதுடன் தொடர்ந்து கல்விகற்பதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.





மாணவி வித்தியா பாடசாலைச் சீருடையுடன்பாடசாலைக்குவந்தபொழுதுஅவளுக்கு நடந்த கொடுமையான மரணம் அதிபர் கணேஸ்வரனின் இதயத்தைத் தினமும் வாட்டியது. வித்தியாவுக்கு நடந்த கொடுமை மரணம் அகிலத்தையே அதிர வைத்தது. அதிபரின் வேதனை அவருள்ளே புகுந்து மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றது. யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்க அனுமதியை தான் வழங்கி இருந்தால் அந்த மாணவிக்கு இந்தக் கொடுமை மரணம் நிகழ்ந்திருக்காது என்ற மன அழுத்தம் அவரைத் தினமும் வாட்டியது. தாய், தந்தை, மனைவி, மக்கள் என்ற பாசப் பிணைப்பு அற்று இல்லற வாழ்வில் இணையாமல் கல்விப் புலத்தில் கால்பதித்துப் பாடசாலையின் வளர்ச்சியும் மாணவர்களின் உயர்ச்சியுமே தன் உயிர் மூச்சாகக் கொண்டு அப்பணிக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிப்புச் செய்த பெருமகன் பெருந்தகை ஆசிரியராய், அதிபராய், குருவாய் வந்த தெய்வம். குருவே சிவம் என்பது திருமூலர் வாக்கு.

நல் ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தைத் தவிர தனக்கென எந்தச் சேமிப்பும் சேர்த்து வைக்காத துறவியாக வாழ்ந்த ஒரு உத்தம அதிபராக வாழ்ந்து காட்டியுள்ளார். பெருந்தலைவர் காமராசர், அண்மையில் மறைந்த மெய்ஞானியும் விஞ்ஞானியுமான முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் போன்றவர்களின் வழியைப் பின்பற்றிய ஒருவராக அமரர் கணேஸ்வரனின் வாழ்வு செயற்பாடு அமைந்திருக்கின்றது. அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதைவிட ஒரு ஏழை மாணவனுக்குக் கல்வி புகட்டினால் கோடி புண்ணியம் கிடைக்கும் என்ற பாரதியாரின் வாக்கைச் செயலில் காட்டிய அமரர் கணேஸ்வரன் ஒழுக்கமான மாணவ சமுதாயத்தை உருவாக்கிய ஆசான்.

நல்லூர் சின்மயா மிஷனில் கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூடி பிரார்த்தனை, பஜனை செய்த பெரும் ஆன்மிகத் தொண்டன். சின்மயா மிஷன் சுவாமிகள் இவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு திருமுறைகளை ஓதி நமசிவாய மந்திரத்தை அனைவரையும் சொல்ல வைத்துப் பிரார்த்தனை செய்தது அமரர் அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

அண்மையில் மறைந்த மெய்ஞானியும், விஞ்ஞானியுமான முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் சொன்னவாறு நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் ஆசிரியர், அதிபர்கள் சமுதாயத்துக்கு நயினை சதாசிவம் கணேஸ்வரனின் இறப்பு ஒருசரித்திரமாகிவிட்டதுஎன்பதுதான்உண்மை. நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகள் சொன்னவாறு முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்தி தா நாகபூஷணியே என்று இறைஞ்சுவோமாக. சாந்தி! சாந்தி! சாந்தி!!!.

> தனது பாடசாலை மாணவி சிவநாதன் வித்தியா பாடசாலைச் சீருடையுடன் பாடசாலைக்கு வருகை தந்த பொழுது காமக் கொடூரக் கூற்றுவர்களால் வன் கொடுமை மரணம் நிகழ்ந்த நாளில் இருந்து 41 நாள்கள் சோறு உண்ணாது விரதம் இருந்து உடல் தளர்ந்து உயிர் துறந்த உத்தம ஆசான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச் சாவடி அருகே நடமாடியவர் கைது



கொழும்பு, ஓக.17
கண்டி கடுகன்னாவை, வெரலு கொல்ல வாக்குச்சாவடிக்கு அருகில் பொலிஸ் பரிசோதகர் போன்று உடையணிந்து நடமாடிய நபரொருவரை, கடுகன்னாவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடுகன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர், மனநலம் பாதிக்கப்பட்டவர் எனச்சந்தேகிப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் குறித்த நபரை கண்டி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் கடுகன்னாவை பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ற)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.17
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஹுதாப் பள்ளி புகையிரத வீதிக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12.15 மணியளவில் நடைபெற்றுள்ளது. ஓட்டமாவடி பிறைந்துரைச்சேனை பகுதியைச் சேர்ந்த முகம்மட் அமீன் (37 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் அவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவ்விடத்தில் மறைந்து நின்ற இனந்தெரியாத இளைஞர் ஒருவர் தன்னிடமிருந்த துப்பாக்கியினால் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுதப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிதாரியை கைது செய்யும் பொருட்டு பொலிஸார் பொது மக்களின் உதவியையும் நாடியுள்ளனர். இச்சம்பவத்தின் பின்னணி தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# தேர்தல் சட்டங்களை மஹிந்த மீறினார் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.17
தேர்தல் சட்டத்தை மீறி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த விஹாரைகளுக்குச் சென்று துணிகளை விநியோகித்ததாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அவ் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் நிறைவடைந்தபோதும், மஹிந்த நேற்றுமுன்தினம் காலை விஹாரைகளுக்குச் சென்று துணிகளை விநியோகித்தமைக்கு உரிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபேயின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் வேட்பாளரின் வாகனத்தில் மாத்திரமே அவரது விருப்பு இலக்கங்கள் மற்றும் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்படலாம் என்று அறிவிக்கப்பட்டபோதும், சுமார் 10 வாகனங்களில் மஹிந்த தமது விருப்பு இலக்கங்களுடன் சென்று இந் நடவடிக்கையை மேற்கொண்டதாக கபே குற்றஞ்சாட்டியுள்ளது. (ற)

உதயன் advt@uthayan.com 0215671111

**வீடு விற்பனைக்கு**

கடுக்காயடி வீதி, நல்லூரில் 2 பரப்புக் காணியுடன் 5 அறைகளுடன் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
தொடர்பு : 077 802 5788, 077 919 5868

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவவிலலும்

மலர்வு 12 . 09 . 1928



உதிர்வு 19 . 07 . 2015

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சோதிட கலாநிதி

### அமரர் ஐயாத்துரை சரவணபவன்

(ஓய்வு பெற்ற அதிபர்)

கடந்த 19.07.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (18.08.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டதும் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் மற்றும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்ரீ லக்ஷ்மி வாசம், உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிந்தாமணி கோபாலசிங்கம்



நெடுந்தீவு கிழக்கு மாவலித்துறையைப் பிறப்பிடமாகவும் 29/1, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி கோபாலசிங்கம் நேற்று (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் கோபாலசிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியும் சாரங்கன் (கனடா), துஷியந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உஷானி (கனடா), வைஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் நேசமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் பூரணம் காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னம்மா மற்றும் நாகரத்தினம், நாகசுந்தரி, கண்மணிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கற்பகம் மற்றும் நாகம்மா காலஞ்சென்றவர்களான தில்லாத்தைப்பிள்ளை, கமலம், சிந்தாமணி மற்றும் கந்தையா, பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2015 வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - சு.கோபாலசிங்கம்
(கணவர் - ஓய்வு நிலை களஞ்சிய முகாமையாளர்)
29/1, நக்கா வீதி, யாழ்ப்பாணம். 0771467050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணை வேண்டும்

*கோருகிறார் ரிஷாத்*

மட்டக்களப்பு, ஓக.17
ஒட்டமாவடி பிரைந்துரைச் சேனையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணையினை நடத்த வேண்டும் என அமைச்சர் ரிசாத் பதியுதீன் பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் இந்தப் பிரதேச மக்கள் அச்சத்தில் இருக்கின்றனர் என்றும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கின்ற சக்திகளை இனம் கண்டு அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.
இந்த சம்பவத்தின் பின்னணியில் உள்ள நபர்கள் எவராக இருந்தாலும் அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் பொலிஸ் மா அதிபரிடத்தில் எடுத்துரைத்துள்ளார். (ற-10)

# கடும் காற்றால் வீடுகள் சேதம்

கொழும்பு, ஓக.17
நாட்டின் பல பகுதிகளில் வீசிய கடும் காற்றால் 40 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
வவுனியாவில் வீசிய கடும் காற்றினால் 6 வீடுகள் சேதமாகியுள்ளதாகவும் 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.
பொலன்னறுவை லங்காபுர மற்றும் அனுராதபுரத்தில் வீசிய கடும் காற்றால் 15 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் 150 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
மேலும், குருநாகல் பொலிபித்திகம பகுதியில் வீசிய கடும் காற்றால் 20 இற்கும் அதிகமான வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.
எதிர்வரும் சில மணித்தியாலங்களில், மத்திய மலைநாடு மற்றும் தெற்கு கடலோர பகுதிகளில் கடுமையான காற்று வீசக்கூடும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ற)

# இலங்கையில் உள்ள சீனருக்கு அந்த நாட்டு அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஓக.17
இலங்கையிலுள்ள சீனாவின் பிரஜைகளுக்கு, அந்நாட்டு அரசு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.
இலங்கையில் இன்று நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சீனா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.
தேர்தல் நடைபெறும் போது, வெளியில் அநாவசியமாக செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதோடு, உள்நாட்டு ஊடகங்களின் செய்திகளை செவிமடுத்து அதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுமாறு சீனா அறிவுறுத்தல் விடுத்துள்ளது.
இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வந்த தமது நாட்டு பிரஜைகள் பலர், விபத்துக்கள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளதாக அந்நாட்டின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அத்துமீறி பிரவேசித்த ஐந்து இலங்கையர் நேபாளத்தில் கைது

கொழும்பு, ஓக.17
நேபாளத்துக்குள் அத்துமீறி பிரவேசித்த ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.
இவர்கள் இந்தியாவினூடாக, அதன் எல்லையைக் கடந்து நேபாளத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.
இதன்போது, சீமா சுர்காசாயா பல் என்ற அந்நாட்டின் எல்லைப் பாதுகாப்புப் படையினர் இவர்களை கைதுசெய்து அந்நாட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்கள் அந்நாட்டிற்குள் பிரவேசித்த தன் நோக்கம் குறித்து, அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
கடந்த காலத்தில் நேபாளத்திற்குள் இலங்கை, பங்களாதேஷ், திபெத், பூட்டான்உள்ளிட்டபலநாட்டுபிரஜைகள் அத்துமீறி பிரவேசிப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன. (ற)

# போலிச் சீட்டுகளுடன் கண்டியில் மூவர் கைது

கண்டியில் ஒருதொகை போலி வாக்குச்சீட்டுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் கண்டி, தலாதுஓய பகுதியிலிருந்து கலஹா நோக்கி ஓட்டோ ஒன்றில் வாக்குச்சீட்டுகளைக் கொண்டு சென்றபோதே பொலிஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்களிடமிருந்து ஆயிரத்து 324 போலி வாக்குச்சீட்டுகள், 323 தேர்தல் பிரசாரக் கையேடுகள், ஆயிரத்து 482 ஸ்டிக்கர்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் தலாதுஓய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளையடுத்து, இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## கண்ணீர் அஞ்சலி

யா/ கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய அதிபர்

**திருமதி சந்திரகலா தியாகராஜா**

அவர்களின் அன்புத் தாய்

**திருமதிஅன்னலட்சுமி செல்வராஜா**

அவர்கள் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் நலன்புரி கழகம்,*
*யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்*
*ஊர்காவற்றுறை.*

## மரண அறிவித்தல்

**சந்திரலிங்கம் சுதர்சன்**
(டயலொக் நிறுவன - யாழ் அலுவலக ஊழியர்)



தெல்லிப்பழையை பிறப்பிடமாக வும் பக்கஸ் லேன், மானிப்பாயை வதி விடமாகவும் கொண்ட சந்திரலிங்கம் சுதர்சன் 15.08.2015 சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் - குடும்பத்தினர்.
பக்கஸ் லேன், மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னலட்சுமி செல்வராஜா**



வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டகேனா ஜினானந்த மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி செல்வராஜா 16.08.2015 ஞாயிற் றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும், ஜெகநாதபிள்ளை பரிபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும்,பொன்னையா பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், வாசுதேவன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான ராதாதேவன், வாமதேவன், யோகேஸ்வரன் மற்றும் சசிகலா (கொழும்பு), சந்திரகலா (அதிபர், யா/ கரம்பொன் சண்முகநாத ம.வி.), மேகலா (டென்மார்), சிறிகலா (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகவேள் (கொழும்பு), விஜயலட்சுமி, தியாகராஜா (ராஜா ரேடர்ஸ், யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (வவுனியா), பரமேஸ்வரன் (டென்மார்க்), தாருகா (சுவிஸ்), யோகராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான கணேசபிள்ளை, சந்திரகலா மற்றும் சொர்ணகாந்தி, புஸ்பகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷாந்தன் (பிரான்ஸ்),ரஜிதா (முகாமைத்துவ பீடம் யாழ். பல்கலைக்கழகம்), நிஷாந்தன் (கொழும்பு), தேனுஜா (முகாமைத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), யதுசா (மாணவி யா/ இந்து மகளிர் கல்லூரி), சுகேஷா (டென்மார்க்),ராபில் (டென்மார்க்), சுகேதா (டென்மார்க்),பவித்திரா (லண்டன்), பவிளாய் (லண்டன்), பவளாய் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2015) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதம்பிட்டிய மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே. 0779873916 ,
0112544352

*தகவல்: குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்

**அழகம்மா வைத்திலிங்கம்**



மாதகலை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட அழகம்மா வைத்திலிங்கம் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை கால மானார்.
அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னக்குட்டி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களாகிய சின்ன தங்கம், கனகமுத்து, இளை யாச்சி, வள்ளிப்பிள்ளை, இராமசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோக ராணி, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராசா, யோகேஸ்வரி (ஆசிரியை யா/அல்லாரை அ.த.க பாடசாலை) ஆகி யோரின் மாமியாரும் நந்தகுமார் (நந்தன் வர்ணப் பூச்சாளர்), ஜெகதா, நளினி, சஞ்ஜயன், நந்தகோபன் ஆகியோரின் பேர்த்தியும் தர்சனா, டினோஜன், ஷர்மிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல் -
குடும்பத்தினர்.
கோபி - 0770518261

## மரண அறிவித்தல்

**திருமதி செல்லம்மா சின்னத்தம்பி**



மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்தம்பி 15.08.2015 சனிக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (முன்னாள் ஊழியர் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - அருமைப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லாச்சி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி.யோகநாதன் (கனடா), க.ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜேந்திரன், வசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தர்சினி மற்றும் நிஷாந்தன், பபிஷான், கேஷனி, சாம், ஜெய்னா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மதவடி ஒழுங்கை, சுதுமலை
வடக்கு, சுதுமலை.
0779575620

தகவல் -
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**ஜெயராஜலிங்கம் பரமேஸ்வரி (விமலா)**



நந்தாவில் லேன், தாவடி கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராஜலிங்கம் பரமேஸ்வரி (விமலா) நேற்று (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பூமணி தம்பதிகளின் பாசமிகு மகளும் ஜெயராஜலிங்கத்தின் (ஜெயம்) அன்பு மனைவியும் டினோதா வின் (கனடா) பாசமிகு தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நந்தாவில் லேன்,
தாவடி.

தகவல் -
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**மல்லிகாதேவி கிருஸ்ணசாமி**



தோற்றம் 28.05.1940 — மறைவு 14.08.2015

யாழ்ப்பாணம், கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி கிருஸ்ணசாமி (தவுசன்) 14.08.2015 வெள்ளிக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமியின் அன்பு மனைவியும் மதிவதனி, சரவணன், வினோதினி, சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணகுமார், சிவாஜினி, யோகதாஸ், சிவராசகுமார் (சாயி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருசாந், பிரசாந்த், ஜெயசாந்த், ஹர்சனா, ருத்ஜன், அர்ச்சனா, அச்சுதன், சௌமியா, ஜனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வடிவேலாயுதம், சீதாலட்சுமி, சரஸ்வதி மற்றும் வைத்தியநாதன், வசந்தரா, பத்மாவதி, கலாவதி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகராசா, நடராசா, செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2015) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லமாகிய இல, 26, திருநகர் வடக்கு கிளிநொச்சியில் நடைபெற்று,தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிளிநொச்சி.

தகவல் -
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குல்லா வியாபாரியும் குரங்குக் கூட்டமும்

ஒரு ஊரில் குமரேசன் என்ற குல்லா வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் நகருக்குச் சென்று விதம் விதமான தலைக் குல்லாய் களை வாங்கி அவற்றை எல்லாம் ஒரு பெரிய மூடையாகக் கட்டி தலையில் சுமையாக நடந்து சென்று பக்கத்து ஊர்களிலும், சந்தைகூடும் இடங்களிலும் விற்பனை செய்துவந்தார். அவரும் தனது தலையில் எப்போதும் குல்லா அணிந்தே இருப்பார்.

வெயில் காலம் தொடங்கியது. மக்கள் வெயிலுக்குப் பயந்து குல்லா வாங்கி அணிய ஆரம்பித்தனர். வாங்கி வந்த குல்லாக்கள் அனைத்தும் உடனே விற்றுத் தீர்ந்து விட்டதால், குமரேசன் நருக்குச் சென்று விதம் விதமான குல்லாக்களை வாங்கி பெரிய மூடையாகக் கட்டி பஸ்சில் ஏற்றித் தனது ஊருக்குக் கொண்டு வந்தார். அடுத்த நாள் காலை அந்த மூடையைத் தனது தலைமீது சுமந்து கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்றார். முதலில் போன ஊரில் சில குல்லாக்கள் மட்டுமே விற்பனையானது. அதனால் குல்லா வியாபாரி வெயிலையும் பொருட்படுத்தாமல் அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தார். ஊர் எல்லையில் இருந்த ஆலமரத்தின் கீழேசற்று நேரம் ஓய்வு எடுக்க நினைத்து குல்லா மூடையை இறக்கி வைத்துவிட்டு சற்று நேரம் தூங்கி விட்டார். வியாபாரி குல்லா மூடை யுடன் தூங்குவதை அந்த மரத்தில் இருந்த குரங்குகள் கண்டன. அவர் அணிந்திருந்த குல்லாவை ரசித்தன. பின்னர் மரத்தில் இருந்து இறங்கி வந்து, குல்லா மூடையைப் பிரித்தன. இதைக்கண்ட வயதான குரங்கு ஒன்று நண்பர்களே... மூடையை அவிழ்க்காதீர்கள். அந்த மனிதர் மிகவும் ஏழ்மையானவர். இந்தக் குல்லாக்களை விற்றுத் தான் அவர் பிழைத்து வருகிறார். தயவு செய்து மூடையைப் பிரிக் காதீர்கள் என்றது.

மற்றக் குரங்குகளோ போ... போ...கிழட்டுக் குரங்கே உனக்கு ஒன்றும் தெரியாது, அவரது தலையைப் பார்...அந்தக் குல்லா எப்படிக் கச்சிதமாக இருக்கிறது பார்...நாங்களும் அவரைப் போல குல்லா அணியப் போகிறோம். நீ பேசாமல் வேடிக்கை பார் என்று கூறி விட்டு குல்லாக்களை ஆளுக்கு ஒன்றாக எடுத்து தலையில் அணிந்து கொண்டன.

தூக்கம் கலைந்து எழுந்த குல்லா வியாபாரி குல்லா மூடை அவிழ்ந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அப்போது கிழட்டுக் குரங்கு, குல்லா வியாபாரியே, உம்முடைய குல்லாக்களை குரங்குகள் எடுத்துத் தலையில் அணிந்து கொண்டன. நான் எவ்வளவோ கூறியும் அவை எனது பேச்சைக் கேட்கவில்லை என்று கூறியது. குல்லா வியா பாரி ஆலமரத்தை ஏறிட்டார். மரத்தில் இருந்த குரங்குகள் ஒவ்வொன்றும் குல் லாக்களை அணிந்து இருந்தன. உடனே குல்லா வியாபாரி குரங்குகளே எனது குல்லாக்களை கொடுத்துவிடுங்கள், நான் அவற்றை விற்பனைக்காக வைத்து இருக்கிறேன் என்றார். குரங்குகள் அவரின் பேச்சை காதுகளில் போட்டுக் கொள்ள வில்லை. உடனே குல்லா வியாபாரி கோபத்துடன் தான் அணிந்து இருந்த குல்லாவைத் கழற்றி வீசினார். உடனே குரங்குகளும் குல் லாவை கழற்றி வீச முயன்றன. ஆனால் அவைகளால் குல்லாக்களைக் கழற்ற முடியவில்லை. குல்லாக்கள் தலையில்இருந்துகீழே இறங்கி அவற்றின் கண்களை மறைத்திருந்தன. அதனால் குரங்குகள் பயந்து நடுங்கின.


உடனே குமரேசன் குரங்குகளே! அந்தக் குல்லாக்கள் மனிதர்களுக்காக தயாரிக்கப் பட்டவை. உங்கள் தலைக்கு ஒத்து வராது. இந்தப் புதுக்குல்லாவை தலையில் மாட்டுவது சுலபம், ஆனால் கழற்றுவது மிகவும் கடினம். எனவே அதை கழற்றும் விதமாகத்தான் கழற்ற வேண்டும் எனவே ஒவ்வொருவராக வாருங்கள், நான் கழற்றிக் கொள்கிறேன், இல்லை என்றால் அந்தக் குல்லாக்கள் உங்கள் கண்களை மறைக்க... நீங்கள் கிளைகளை விட்டுக் கிளைக்குத் தாவ முடியாமலும், உணவை அடையாளம் காண முடியாமலும் தவியாய்த் தவிக்க நேரிடும் என்று கூறினார். உடனே குரங்குகள் குல்லா வேண்டாம், தலை தப்பினால் போதும் என்று குல்லாவியாபாரியின் முன் வரிசையில் வந்து நின்றன. வியாபாரியும் குல்லாக்களை குரங்கின் தலையில் இருந்து கழற்றி எடுத்துக் கொண்டார்.

பிறர் பொருள்களை அவரின் அனுமதி இன்றி அபகரிப்பது அடி முட்டாள் தனமான காரியம். அது அநாகரிகமும் கூட. அந்தச் செயலைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள். உங்கள் செயலுக்கு துணை போகாத வயதான குரங்கு மட்டும் தான் நாகரிகம் பேணிய நல்ல குரங்கு. அந்த வயதான குரங்குக்கு நான் ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன் என்று கூறிய குல்லா வியாபாரி, தான் தலை யில் அணிந்து இருந்த விலை உயர்ந்த ஜரிகை வேலைப்பாடுடன் கூடிய குல்லாவை எடுத்து அந்த வயதான குரங்கின் தலையில் அணிவித்தார்.

வயதான குரங்கும் அந்தக் குல்லாவை மகிழ்ச்சியுடன் தலையில் அணிந்து கொண்டது. மற்றக் குரங்குகள் அந்த வயதான குரங்கை ஏக்கத்துடன் பார்த்தன. இனிமேல் பிறர் பொருள்கள் மீது ஆசை வைக்கக்கூடாது என்று முடிவெடுத்தன. குல்லாவியாபாரி குல்லாக்களை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு புறப்பட்டார்.





# வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள்

1.பிடித்த காரியத்தையே செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். நீங்கள் செய்யும் காரியத்தை பிடித்ததாக மாற்றிக்கொள்ளுங்கள். விரைவில் நீங்களே ஒரு மாற்றத்தை உணர்வீர்கள்.

2.வாழ்க்கையில் எதற்கும் பயப்படாதீர்கள். வேலை, பாதுகாப்பு என்பவற்றைக் கருதி ஒரே இடத்தில் இருந்து விடாதீர்கள். புதிய முயற்சிகளால் மட்டுமே முன்னேற்றத்தை உணர முடியும்.

3.மற்றவர்களையும் உங்களுக்காக உழைக்க வைக்கும் புத்திசாலித்தனம் இருந்தால் மட்டுமே நீங்கள் நல்ல ஒரு தலைமையாக முடியும்என்பதைஉணர்ந்துகொள்ளுங்கள்.

4.கீழே விழுவது வேகமாக எழுவதற்காகவே, அதனால் விழுவதைப்பற்றிக் கவலை படாதீர்கள். அது வெற்றியின் ஏணிப்படி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

5.வெற்றிக்கு நேரம் அவசியம் என்பதால், நேரத்தை உருப்படியாக செலவிடத் தெரிந்து கொள்ளுங்கள்.

6.எதற்கும் கவலைப்படுவதை விட்டு விட்டு எப்பொழுதும் சாதகமான எண்ணங்களுடன் இருங்கள்.

7.வெற்றிக்கான முதல் சாவி உழைப்புத் தான். அதனால் தினமும் குறைந்தது 10 முதல் 12 மணிநேரம் உழையுங்கள்.

8.முடியாது, கஷ்டம், நடக்காது போன்ற சொற்களை உங்கள் அகராதியில் இருந்து தூக்கி எறியுங்கள்.

9. வாய்ப்புக்களைத் தவற விடாதீர்கள். சரியான நேரத்தில் நன்றாகப் பயன்படுத்திக் கொள் ளுங் கள்.



10. நீங்கள் என்னதான் உழைத்தாலும், சில நேரங்களில் அதிர்ஷ்டமும் தேவை. இறைவனை நம்புங்கள். உங்கள் வெற்றியை இறைவனுக்குக் காணிக்கை ஆக்குங்கள்.

11.வாழ்க்கையில் சந்தோஷம் என்பது பணத்தினால் மட்டுமே வருவதில்லை. அதனால், உலகில் அனைத்து விடயங்களை யும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

12.நாளை பார்க்கலாம் என்று எதனையும் தள்ளிப் போடாதீர்கள். அது நடக்காமலே போய் விடக் கூடும்.

13.துணிச்சலான முடிவுகளை எடுக்கக் கூடிய தைரியம் வேண்டும்.

14. வெற்றி உடனடியாகக் கிடைத்து விடாது. ஒவ்வொரு படியாக, மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறுங்கள்.

15. தொழிலில் பல சிக்கல்களும் இடயூறுகளும் வரும் என்றாலும்கூட, நீங்கள் அஞ்சாமல் மனத் தைரியத்துடன் அவற்றைச் சந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சமின்றி

சுதந்திரமானதும் – நீதியானதுமான தேர்தலை நடத்துவது மிகவும் அவசியமாகும். இவற்றை மீறிச் செயற்படுவோர் எவராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெற்றால் குறித்த வாக்குச் சாவடியின் வாக்களிப்பு இரத்துச் செய்யப்படும். – என்று அவர் தெரிவித்தார்.

அசம்பாவிதங்களைத் தடுக்க பொலிஸாருக்கு உச்சபட்ச அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் எவ்வித அச்சமுமின்றி வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கலாம்.

சட்டங்களை உருவாக்குகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்ற இந்தத் தேர்தலில் சட்டத்தை மீறுகின்ற சம்பவங்கள் இடம்பெறுமாயின், சட்டத்தை மீறுகின்றவர்களைக் கைதுசெய்யுமாறும், அவர்களை பொலிஸ் பிணையில் விடுவிக்காமல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் பொருள்களை விநியோகித்தல், உணவு விநியோகித்தல், அச்சுறுத்தல் மற்றும் பணம் கொடுக்கும் வேட்பாளர்கள் தொடர்பில் தேர்தலுக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறும் வேட்பாளர்களுக்குமதிய உணவுபொலிஸ் நிலையத்திலும், இரவு உணவு விளக்கமறியலிலும் வழங்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் தொடர்பான தகவல் பதிவேடு ஒன்றைக் கையாளுமாறும் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பதிவேட்டை மிகக் கவனமாகக் கையாளவேண்டும் எனவும் தேர்தல் செயலகம் கூறியுள்ளது. இந்தப் பதிவேட்டை பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் தேர்தல்கள் தொடர்பான வழக்குகள் முடியும் வரை அவற்றைக் கவனமாக வைத்திருக்குமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ற–சி)

## பலத்த

யாழ்ப்பாண மாவட்ட வாக்குப் பெட்டிகள், யாழ்.மத்திய கல்லூரியிலிருந்தும், கிளிநொச்சி மாவட்ட வாக்குப் பெட்டிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலிருந்தும், முல்லைத்தீவு மாவட்ட வாக்குப் பெட்டிகள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்தும், வவுனியா மாவட்ட வாக்குப் பெட்டிகள் வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்தும், மன்னார் மாவட்ட வாக்குப் பெட்டிகள் மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்தும் எடுத்துச் செல்லப்பட்டது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் அதிகாரிகள், பொலிஸார் ஆகியோருக்கு அந்தந்த மாவட்டங்களில் தெரிவத்தாட்சி அலுவலரினால் விளக்கம் கொடுக்கப்பட்டு உத்தியோகபூர்வ கடிதம் வழங்கப்பட்டது.

அதன் பின்னர், அதிகாரிகள் வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டு பொலிஸாரையும் அழைத்துக் கொண்டு பஸ்களில் தமது வாக்கெடுப்பு நிலையத்துக்குச் சென்றனர்.

இதன் காரணமாக, வாக்கெண்ணும் நிலையங்களைச் சுற்றி கடும் பாதுகாப்பு நேற்றுப் போடப்பட்டிருந்தது. கொழும்பில் டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி மற்றும் றோயல் கல்லூரி ஆகியவற்றிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டன. குருநாகல் மாவட்டத்தில் குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரி உட்பட நான்கு நிலையங்களிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் பிரதான தேர்தல் வாக்கெண்ணும் நிலையமான யாழ். மத்திய கல்லூரியிலிருந்து நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் கொண்டுசெல்லப்பட்டன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் மொத்தமாக 526 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த வாக்குப்பெட்டிகள் பஸ்களில் பூரண பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை, யாழ். தீவகப் பகுதிகளுக்கான வாக்குப்பெட்டிகள், புங்குடுதீவு வரையில் பஸ்களில் எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கப்பல்களில் தீவுப்பகுதிகளுக்கு எடுத்துச்செல்லப்படவிருக்கின்றன.

இதேபோல், கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, வன்னி, திகாமடுல்லை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கம்பஹா, புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றுக் காலை முதல் வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்பட்டன.

(ற–5,20,101,106,135,86)

## வாக்களிப்பு

முழுநாடும் தேர்தலுக்காக முழுமையாகத் தயாராகியுள்ள நிலையில், நீதியானதும் – சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்காக 75 ஆயிரம் பொலிஸார் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். நீதியான தேர்தலொன்று இடம்பெறுகின்றதா என்பதைக் கண்காணிக்க தேசிய மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாடுமுழுவதும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்று ஆட்சியமைக்கமுடியாது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிவரும் நிலையில், பிரதான இரு அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன பெரும்பான்மைப் பலத்தைப்பெற்று ஆட்சியமைப்போம் என்ற நம்பிக்கையுடன் தமது தேர்தல் பரப்புரைகளை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளன. நீதியானதும் – சுதந்திரமானதுமான தேர்தலொன்று நடத்தப்படும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

**6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள்**

பொதுத் தேர்தலில் வாக்காளர்களால் நேரடியாக 196 உறுப்பினர்களும், தேசியப் பட்டியல் ஊடாக 29 உறுப்பினர்களும் என மொத்தமாக 225 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். 196 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான இந்தத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

2014ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் பிரகாரம் ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்காக 12 ஆயிரத்து 314 வாக்களிப்பு நிலையங்கள் நாடுமுழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 600 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளில் நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் அரச ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**75 ஆயிரம் பொலிஸார் பாதுகாப் புக் கடமையில்**

அசம்பாவிதங்கள் எதுவுமின்றி அமையான தேர்தலை நடத்துவதற்காக 75 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும், வாக்குப் பெட்டிகளைக் கொண்டுசெல்லும் வாகனங்கள், வாக்கு எண்ணும் மத்திய நிலையங்கள் ஆகியவற்றுக்குப் பலத்தப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, பிரதான நகரங்களிலும் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களிலும் பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

75 ஆயிரம் பொலிஸாரில், 12 ஆயிரத்து 399 வாக்களிப்பு நிலையங்களில், தலா இருவர் வீதமும், 5 ஆயிரத்து 700 பொலிஸார் ரோந்துப் பணியிலும், ஈடுபடவுள்ளனர். மேலும், எந்த அவசர நிலையையும் சமாளிப்பதற்காக ஆயிரத்து 300 இற்கு அதிகமான கலகத் தடுப்புப் பொலிஸாரும் பணியில் ஈடுபடுவர்.

**172 சர்வதேச கண்காணிப்பாளர்**

இன்றைய தேர்தலைக் கண்காணிப்பதற்காக 172 சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுகின்றனர். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் 80 பேரும், தெற்காசிய தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் 29 கண்காணிப்பாளர்களும், ஆசிய தேர்தல் அதிகாரிகள் ஒன்றியத்தின் 3 கண்காணிப்பாளர்களும், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் 15 கண்காணிப்பாளர்களும் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, பவ்ரல் அமைப்பின் அழைப்பின்பேரில், சர்வதேச கண்காணிப்பாளர்கள் 15 பேரும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் அழைப்பின் பேரில் 30 சர்வதேச கண்காணிப்பாளர்களும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, தேர்தல்கள் செயலகம், பவ்ரல், கபே முதலான தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் நாடு முழுவதும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்களைக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளன. (ற–சி)

## மீசாலையில்

சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தி ஏ–9 வீதியில் நடந்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருந்த திருமணத்துக்காக பிரான்ஸிலிருந்து வந்த மணமகனை அழைத்துவந்த ஹையஸ் வாகனமே விபத்துக்குள்ளானது. விபத்தில் வாகனச் சாரதியும் மணமகனின் மாமனும் சம்பவ இடத்தில் உடல் நசிந்து சாவடைந்தனர். அவர்களது உடல்கள் நசியுண்ட வாகனத்தின் முன்பகுதிக்குள் சிக்கியிருந்ததால் உழவு இயந்திரம் மூலம் சேதமடைந்த பகுதியை நிமிர்த்தியே வெளியே எடுக்கப்பட்டன.

விபத்து தொடர்பாக 119 இலக்கத் தொலைபேசிக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் சம்பவ இடத்திற்குச் சென்று காயமடைந்தவர்களை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கொடிகாமம் பொலிஸாரும் பொதுமக்களும் பெரும் சிரமத்தின் மத்தியில் சடலங்களை மீட்டனர். அவை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

வாகனத்தின் சாரதியான வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த சிவானந்தராஜா செல்வகுமாரன் (வயது–27), மூன்றாம் கட்டை ஆனைக்கோட்டை மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி ரவீந்திரன் ஆகியோரே சாவடைந்தவர்களாவர்.

மூன்றாம் கட்டை ஆனைக்கோட்டை மானிப்பாயைச் சேர்ந்த சிறி காந்தவேல் ( வயது–67 ), அவரது மனைவியான சிறிகாந்தவேல் விஜயமலர் ( வயது–61 ), மணமகனான ரவீந்திரன் கௌதமன் ( வயது 26 ), செல்லப்பா சுகிர்தரஞ்சன் ( வயது 54) வல்வெட்டித்தறை கம்பர்மலையைச் சேர்ந்த செல்லச்சாமி செல்வேந்திரன் ( வயது 30 ) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## புலிகளின்

யொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது– விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இறுதிப் போரின் போது படையினருக்கு லஞ்சம் வழங்கி தப்பிச் சென்றதாகக் கூறும் போலிப் புத்தகமொன்றே இவ்வாறு அச்சிடப்பட்டுள்ளது. இந்த புத்தகம் அச்சிடுவதற்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதானியொருவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

சில இலத்திரனியல் ஊடகங்களில் பிரபாகரன் என காண்பிக்கப்பட்ட நபர், அவரது உருவத்திற்கு சமமான வேறு நபராகும் என இராணுவப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. இங்கிருந்து தப்பிச் சென்ற அவர் புதுடெல்லியின் த்ரிலோனபூர் என்னும் இடத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒன்றரை வருடம் தங்கியிருந்தார் என நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலை யார் எழுதியது என்பது பற்றிய தகவல்கள் கண்டறியப்படவில்லை. எவ்வாறெனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தப்பிச் சென்றதாக கூறப்படும் தகவல் வெறும் கட்டுக்கதை என சிரேஷ்ட இராணுவப் புலனாய்வு அதிகாரியொருவர் சிங்களப் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். (ற–5)

## விதிகள்

யும்வரை பொலிஸ் திணைக்களம் அதிக விழிப்புணர்வுடன் செயற்படுமென பொலிஸ்மா அதிபர் என். கே.இலங்ககோன் அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அதேவேளை, தவறிழைப்போருக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றனர். எனவே, அனைத்து வேட்பாளர்களும், வாக்காளர்களும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (ற–சி)

## முதன் முறையாக

இத்தாலி, சுவீடன், ஹொலன்ட், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகள், கொழும்பில் தூதரகங்களைக் கொண்டுள்ளன.

இவற்றில் பணியாற்றும் இராஜதந்திரிகளே தேர்தல் கண்காணிப்பிலும் ஈடுபடவுள்ளனர். இராஜதந்திரிகள், வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குச் சென்று அவதானிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும், வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வரையறுக்கப்பட்ட பங்கையே ஆற்றுவார்கள். எந்த விவகாரத்திலும் தலையீடு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதனிடையே, இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பில் 180, வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள், 20 வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் 20 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்களும் பணியில் ஈடுபடவுள்ளனர். (ற–ரி)

## லஞ்சமாக

திணைக்களத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் பரப்புரைகள் சுமுகமாக கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்திருந்தது. அதன் பின்னர், வாக்காளர்களுக்கு லஞ்சமாக பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் தேசியக் கட்சியினர் முன்னெடுத்துள்ளனர். அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாகவுள்ள வீடொன்றில் விநியோகத்திற்காக மறைத்து வைத்திருந்த பொருள்கள் தொடர்பில், யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது. இதனடிப்படையில் குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார், விநியோகத்துக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பொருள்களை மீட்டத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைக் கைது செய்தனர்.

இதேவேளை, குறித்த அமைப்பாளர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இவ்வாறு பொருள் விநியோகத்தில் ஈடுபட்டிருந்தமை தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திற்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பொன்னகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை, தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவரால் பொதுமக்களுக்கு அரிசி விநியோகம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அறிந்த தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு விநியோகத்துக்கு தயாராக இருந்த அரிசி, அதற்குரிய பெயர் பட்டியல் என்பவற்றையும் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில், குறித்த வேட்பாளர் தேர்தல்கள் திணைக்கள அதிகாரியை தொலைபேசியில் மிரட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–5,101)

## நேரத்தோடு

இதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல்கள் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மேலதிக தேர்தல் ஆணையாளர் மொஹமட் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். வாக்குரிமை உள்ள ஒவ்வொருவரும் இன்று காலை நேரத்துடனேயே, தமது வாக்குகளைச் செலுத்துமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ற–ரி)

## நள்ளிரவுக்கு

மேலும், வாக்களிப்பு நிலையங்களில் பதிவான வாக்குகளைக் கொண்ட வாக்குப்பெட்டிகள், வாக்குகள் எண்ணும் நிலை யங்களுக்கு வந்துசேர்ந்ததும், இன்று இரவு 9 மணியளவில் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும்.

முதலில் தேர்தல் தொகுதி ரீதியான முடிவுகள் வெளியிடப்படும். அதையடுத்து, மாவட்ட ரீதியான முடிவுகளும், இறுதியில் தேசிய அளவிலான முடிவுகளும் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நாளை நண்பகல் அளவில், இறுதியான தேசியமட்ட முடிவுகள் வெளியிடப்படுவதுடன், இரவு, விருப்பு வாக்குகளின் விவரங்கள் வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸிடம் வீழ்ந்தது மத்தி



யாழ்ப்பாணம், ஓக. 17
யதுர்சனனின் சிறப்பான பந்து வீச்சு, மற்றும் துடுப்பாட்டம் கைகொடுக்க யாழ். மத்திய கல்லூரியை 61 ஓட் டங்களால் வீழ்த்தி சம்பியன் ஆனது சென்.ஜோன்ஸ் கல்லூரி.
யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 17வயதுப்பிரிவு அணியினருக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யதுர்சன் 68 ஓட்டங்களையும், பிரசாந் 32 ஓட்டங்களையும், சபிஸ் 28 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் கௌ தமன் 3 இலக்குகளையும், கிசோர்பன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 40 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களில் சுருண்டனர். அதிகபட்சமாக டினோசன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் சோமஸ்கரன் 3 இலக்குகளையும் யதுர்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் யதுர்சனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் யதுர்சன், தேவ பிரசாந் இருவரும் சிறந்த பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சோமஸ் கரனும், யாழ். மத்திய கல்லூரியின் கௌதமனும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரி அணியின் தசோபன் மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் கபில்ராஜ் ஆகியோர் தெரிவானார்கள். (ம-23)

## அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக முடிவுகள்



யாழ்ப்பாணம், ஓக. 17
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ். உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.
அராலி அண்ணா அணிக்கும் விளான் அன்ரனிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி அண்ணா அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அராலி ஜேம்ஸ் அணிக்கும் துறையூர் ஜயனார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும், ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் துறையூர் ஜயனார் அணி, 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அராலி பாரதி அணிக்கும் தம்பாட்டி காந்திஜீ அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி பாரதி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மாதகல் சென்.தோமஸ் அணிக்கும் மூளாய் வளர்மதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மூளாய் வளர்மதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
புங்குடுதீவு நசேரத் அணிக்கும் அராலி திருமகள் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு நசேரத் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
கருணாகரன் அணிக்கும் கொக்குவில் பொற்பதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும், ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. சமநிலை தகர்ப்பு உதைகளில் கருணாகரன் அணி, 3:2 என்ற கோல் கணக்கில் வெ[illegible]றி பெற்றது.
அராலி மாவத்தை அணிக்கும் சென்.தோமஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி மாவத்தை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிக்கும் அல்லப்பிட்டி பிலிப்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அராலி வானவில் அணிக்கும் தாவடி காளி அம்பாள் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

## இத எங்கட ஊர் பொம்பிளப் பிள்ளையள் தூக்கத்தால எழும்பினதும் இலவசமா எடுக்கலாமே!

ரென்னிஸ் உலகில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கிவரும் செரீனா வில்லியம்ஸை வைத்து நியூயோர்க்கில் இருந்து வெளியாகும் வார இதழ் ஒன்று விதம்விதமாக புகைப்படங்களை எடுத்து வெளியிட்டுள்ளது.
கோடி ரூபாய்களை செரீனாவுக்கு கொட்டிக்கொடுத்து இந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டாலும் திருப்தி தரும் வகையில் அப்படங்கள் அமையவில்லை என்பதே செரினாவினதும் குறித்த வார இதழ் நிறுவனத்தினதும் கவலையாக உள்ளது. சில இணையக் குசும்பர்கள் புகைப்படத்துக்கு ஷெரபோவா தான். செரினா அதுக்கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டா என்று நகைச்சுவையான கருத்துக்களையும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். (ம)



## சங்கா மீது அதிருப்தி
### கொட்டித் தீர்த்தார் ரணதுங்க




சங்கக்காரா இளம் வீரர்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார். விடைபெறும் விழாக்களையும் மக்கள் மத்தியில் பிரபலமாக வேண்டும் என்றும் விருப்பத்துடன் செயல்படுகிறார். இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கு உலகக்கிண்ணம் வென்றுதந்த முன்னாள் அணித்தலைவர் ரணதுங்க.
சங்கக்காரா தொடர்பாகவும் அவரது ஓய்வு தொடர்பாகவும் ரணதுங்க தெரிவித்ததாவது சங்கா ஓய்வு அறிவித்த முடிவு மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் அவர் ஓய்வை அறிவித்த நேரம் சஞ்சலத்தை ஏற்படுத்துகிறது. ஒரு தொடரின் நடுவே அதாவது சில ஆட்டங்கள் மீதிருக்கையில் அணியைக் கைவிட்டுச் செல்வது பாரதூரமான குற்றமாகும். இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாடாமல் சங்கா ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அல்லது தொடரை முழுமையாக விளையாடியிருக்க வேண்டும். இரண்டும் செய்யாமல் தொடரின் பாதியில் சங்கா விலகுவதுக்கு ஓரே காரணம்தான் உண்டு. அதாவது சங்கா தனக்கு விழா எடுப்பதை விரும்புகிறார். பலர் பார்க்க ஆடம்பரமாக ஓய்வு பெற வேண்டும் என்பதே அவர் திட்டம். இந்தியாவுக்கு எதிராக முழுமையாக விளையாடினால் தொடர் இந்தியாவிடம் செல்லும் பட்சத்தில் இலங்கையின் தோல்வியில் சங்காவின் ஓய்வ எடுபடாமல் போய்விடும். மொத்தத்தில் சங்கா இன்னொரு வீரரின் வாய்ப்புக்களை பறித்தெடுக்கிறார். நான் திடீரென என் ஓய்வை அறிவித்தேன். விழா இல்லாமல் விடைபெற்றேன். ஏனெனில் நான் மண்ணுக்காக விளையாடினேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் தலையில் தானே மண்ணைக்கொட்டுகிறது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை

## கோக்லி மீண்டும் காட்டம்



நடுவரின் முடிவை மீள் பரிசீலனை செய்யும் முறைமைக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உடன்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் இந்திய அணியின் டெஸ்ட் தலைவர் கோக்லி.

இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெறும் நிலையில் இருந்த இந்திய அணி திடீர் சரிவுகண்டு அதிர்ச்சித் தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கு இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் சொதப்பலாக அமைந்தமை பிரதான காரணமாக அமைந்தாலும் மீள் பரிசீலனை முறைமை இல்லாமையும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய சந்திமால் 162 ஓட்டங்களை விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்றார். ஆனால் உண்மையில் அவர் 34 ஓட்டங்களில் ஆட்டமிழக்க வேண்டியவர். அஸ்வின் வீசிய பந்தை சந்திமால் எதிர் கொண்ட வேளையில் துடுப்பில் உரசிச் சென்ற பந்து கால்காப்பில் பட்டு மேலெழும்ப ரஹானே அதனைப் பிடி யெடுத்தார். ஆனால் ஆட்டமிழப்பு அல்ல என்று நடுவரால் நிராகரிக்கப்பட்டது. பின்னர் மீள் பரிசீலனை செய்து பார்த்ததில் பந்து துடுப்பில் பட்டது தெளிவாகத் தெரிந்தது. இதனை பிரதானமாக வைத்தே கோக்லி மீள் பரிசீலனை முறைமை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தோல்வி தொடர்பாக கோக்லி தெரிவித்ததாவது:–இந்தத் தொடரில் மீள் பரி சீலனை முறையை பயன்படுத்தவில்லை. இந்தச்சமயத்தில் விவாதம் நடத்தும் அளவுக்கு இது ஒரு பிரச்சினை அல்ல. அதேசமயம், தொடர் முடிந்ததும் இம்முறை எவ்வளவு முக்கி யத்துவம் என்பது பற்றியும், எத்தனை முறை பயன்படுத்தலாம்? என்பது பற்றியும் சிந்தித்து ஆலோசிப்போம். பங்களாதேஷ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு எதிரான தொடரின் போதே மீள்பரிசீலனை முறைமை வேண்டும் என்று நான் தெரிவித்தேன். ஏனெனில் டெஸ்ட் ஆட்டத்தில் ஒவ்வொரு சிறு தவறும் மிகவும் ஆபத்தானவை. இதை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உணர வேண்டும். இனியும் தன் தலையில் தானே மண்ணைக் கொட்டக் கூடாது என்றார். (ம)

## ஆஸியின் தலைவராக சிமித்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஆஷஸ் தொடரை 3–1 என்ற கணக்கில் இழந்துள்ளது. இதனால் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் டெஸ்ட் தொடர்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதனையடுத்து ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் புதிய அணித்தலைவராக சிமித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடக்க ஆட்டக்கர்ரரான வார்னர் துணைத் தலைவராக செயல்பட இருக் கிறார். ஒருநாள் தொடருக்கு பெய்லி அணித்தலைவராக செயல்படுவார். இருப்பினும் சில மாத காலத்தில் ஒரு நாள் தலைமையும் சிமித்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



## ஆஷஸ் ஆஸ்திரேலியாவின் தோல்விக்காக பயிற்றுவிப்பாளர் பகிரங்க மன்னிப்பு



நடப்பு ஆஷஸ் தொடரை இங்கிலாந்திடம் பறிகொடுத்ததற்காக ஆஸ்திரேலியா அணியின் பயிற்றுவிப்பாளர் டேரன் லீ மேன் மன்னிப்பு கேட்டுள்ளார்.

ஆஷஸ் தோல்வி தொடர்பாக டேரன் தெரிவித்ததாவது; நாங்கள் மோசமாக விளையாடினோம். எங்களைவிடவும் சிறப்பான அணியிடம் தோல்வி அடைந்தோம். ஒரு பயிற்றுவிப்பாளராக, ஆஸ்திரேலியா அணியின் தோல்விக்காக மன் னிப்பு கேட்கிறேன். தோல்விகளுக்கு சாக்குபோக்குகள் கூற விரும்பவில்லை. ஆனால் இதே அணிதான் உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது என்பதையும் இதே இங்கிலாந்துதான் காலிறுதிக்கு தகுதிபெறாமல் வெளியேறியது என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அணியின் வெற்றியும் தோல்வியும் வீரர்களின் போர்மிலேயே தங்கியுள்ளது. தற்பொழுது ஆஸ்திரேலியா போர்மின்றித் தவிக்கிறது. இங்கிலாந்து சிறந்த போர்மில் உள்ளது. மற்றும்படி இதில் வேறொன்றுமில்லை என்றார். (ம)

## ஸ்ரீசாந்துக்கு எதிராக மேன்முறையீடு



சூதாட்ட வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீசாந்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யப் போவதாக டெல்லி பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் இருந்து கிரிக்கெட் வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கீத் சுவான், அஜீத் சண்டிலா உட்பட 36 பேரை டெல்லி உயர் நீதிமன்றம் கடந்த மாதம் 25ஆம் திகதி விடுத்தது. இதனால் தனது கிரிக்கெட் வாழ்க்கை மீண்டும் கிடைக்கப் போகிறது என்று ஆர்வத்துடன் இருந்தார் ஸ்ரீசாந்த். ஆனால் ஸ்ரீசாந்துக்கு எதிராக மேன் முறையீடு செய்ய டெல்லி பொலிஸ் பிரிவு தீர்மானித்துள்ளது. ஸ்ரீசாந்த் மீது சுமத்தப்பட்ட குற்றம் உறுதி செய்யப்பட்டால் அவருக்கு வாழ்நாள் தடை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சானியாவுக்கு அபராதம்



இந்தியாவின் ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்ஷா போக்குவரத்து விதிகளை மீறியதால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் ஹைதராபாத்தில் நடத்தப்பட்ட வாகன சோதனையின் போது போக்குவரத்து காவல் அதிகாரிகள் சானியா மிர்ஷா காரின் இலக்கத்தகடு போக்குவரத்து விதிகளை மீறும் வகையில் தவறாக இருப்பதை கண்டறிந்தனர். இதனை அடுத்து அவருக்கு இருநூறு ரூபாய் (இந்திய மதிப்பில்) அபராதம் விதிக்கப்பட்டதாக ஹைத ராபாத் போக்குவரத்து காவல்துறையை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

## மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடரின் காலிறுதி ஆட்டங்கள்



கனடாவின் மொன்றியேல் நகரில் நடைபெற்றுவரும் மொன்றியேல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இங்கிலாந்தின் முர்ரே, ஸ்பெயினின் ரபேல் நடால், அமெரிக்காவின் ஜோன் இஸ்னர் ஆகியோர் காலிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளனர். குல்பிஸ், நிஷகோரி, செர்மி, கோங்கா ஆகியோர் ஏற்கனவே காலிறுதிக்கு தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஜோகோவிச் 6–2, 6–1 என்ற நேர்செற்களில் அமெரிக்காவின் ஜேக் சாக்கை வீழ்த்தினார். இதன் மூலம் மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடரில் தொடர்ச்சியாக 28 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார். மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடரில் 3 முறை கிண்ணம் வென்றவரான ஜோகோவிச், தனது காலிறுதியில் லத்வியாவைச் சேர்ந்த தகுதி நிலை வீரரான எர்னஸ்ட் குல்பிஸை சந்திக்கிறார்.

முர்ரே 6–3, 6–2 என்ற நேர் செற்களில் லக்ஸம்போக்கின் ஜில்ஸ் முல்லரைத் தோற்கடித்தார். காலிறுதியில் பிரான்ஸின் ஜோ வில்பிரைட் சோங்காவை சந்திக்கிறார் முர்ரே. சோங்கா தனது 3–வது சுற்றில் 7–6, 6–3 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் பெர்னாட் டோமிக்கை தோற்கடித்தார்.

மொன்றியேல் மாஸ்டர்ஸ் தொடரில் 3 முறை கிண்ணம் வென்றவரான ரபேல் நடால் 6–3, 6–3 என்ற நேர் செற்களில் ரஷ்யாவின் மிக்கேல் யூஸ்னியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். அடுத்ததாக ஜப்பானின் நிஷிகோரியை சந்திக்கிறார் நடால்.

அமெரிக்காவின் ஜோன் இஸ்னர் 7–5, 6–3 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் நிக் கிர்ஜியோஸை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் பிரான்ஸின் ஜெர்மி சார்டியை சந்திக்கிறார் இஸ்னர். (ம)

## டெஸ்ட்டுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

ஆஷஸ் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஓவலில் நடைபெறவுள்ள நிலையில், டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது எதிர்கொள்ளும் பாதிப்புக்களை விளக்கும் விதமாக ஒரு போராட்டம் ஒன்று மைதானத்துக்கு வெளியே ரசிகர்களால் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டங்களில் பெரும்பாலானவை மூன்று அல்லது நான்கு நாட்களில் முடிவடைந்துவிட்டன. இதற்கு வீரர்களின் ஈடுபாடு இன்மைதான் காரணம் என சொல்லப்படுகிறது. டெஸ்ட் ஆட்டங்களின் எதிர்காலம் தற்பொழுது கேள்விக்குறியாகியுள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஓவல் மைதானத்திற்கு வெளியே 5 நிமிடங்கள் போராட்டம் நடத்த இங்கிலாந்து ரசிகர்கள் முடிவு செய்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தை காட்டினார் வர்மா



போலந்தில் நடைபெற்று வரும் வில்வித்தை உலகக்கிண்ணத் தொடரில் இந்திய வீரர் அபிஷேக் வர்மா தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

இறுதிச்சுற்றறில் ஈரான் நாட்டின் இஸ்மாயில்பாதிக்கும் அபிஷேக் வர்மாவுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. ஒவ்வொரு சுற்றுக்களின் முடிவிலும் ஓரிரு புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் இருந்தது. முடிவில் அபிஷேக் 148–145 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். (ம)

## முன்னேறினார் ஹேரத்



டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய இடதுகை பந்துவீச்சாளர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார் ஹேரத்.

இலங்கை – இந்தியா டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 37 வயதான அவர் 48 ஓட்டங்கள் கொடுத்து 7 இலக்குகளைக் கைப்பற்றி இலங்கையின் வெற்றிக்கு வித்திட்டார். இந்த 7 இலக்குகளின் உதவியுடன் டெஸ்டில் ஆட்டங்களில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய இடதுகை சுழற்பந்து வீரர்களில் 3ஆவது இடத்தை பிடித்தார். அவர் 61 டெஸ்ட் 270 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

இடதுகை பந்துவீச்சாளர்களில் அதிக இலக்குகளைக் கைப்பற்றியவராக நியூஸிலாந்தைச் சேர்ந்த விக்டோரி (372 இலக்குகள்) உள்ளார். இரண்டாவது இடத்தில் இங்கிலாந்தின் டெரிக் ஆன்டர்வுட் (297 இலக்குகள்) உள்ளார். (ம)

## சாய்னாவுக்கு வெள்ளி வரலாற்றுச் சாதனையாகவும் பதிவு

உலக பூப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் சாய்னா நெவால் தோல்வியடைந்தார். ஆனாலும் வெள்ளிப் பதக்கத்துடன் புதிய சரித்திரம் படைத்தார்.

தரப்படுத்தலில் இரண்டாம் நிலை வீராங்கனையான சாய்னா, உலகின் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சாம்பியனுமான ஸ்பெயினின் கரோலினா மரினை சந்தித்தார். சாய்னா சிறிது போராட்டகுணம் காட்டினாலும் 16–21, 19–21 என்ற நேர் செட்களில் கரோலினாவிடம் தோல்வி கண்டார். உலக பூப்பந்தாட்டத் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமை சாய்னாவுக்கு கிடைத்துள்ளது. (ம)

# செரீனாவும், செரபோவாவும் மட்டுமே வீராங்கனைகள் அல்ல

## விமர்சகர்கள் மீது கிவித்தோவா பாய்ச்சல்

வரவிருக்கும் அமெரிக்கன் ரென்னிஸ் தொடரில் செரீனாவும், செரபோவாவும் மட்டுமே கிண்ணத்தைக் கைப்பற்றக் கூடிய வீராங்கனைகள் அல்ல. அதற்கான வாய்ப்பு எனக்கும் மகரேவா, வோஸ்னியாக்கி போன்ற வீராங்கனைகளுக்கும் உண்டு இவ்வாறு தெரிவித்துள்ளார் பெத்ரா கிவித்தோவா.

இம்மாத இறுதிப்பகுதியில் அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான பயிற்சித் தொடரான சிற்றி ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில் செரீனா அல்லது செரபோவா இருவரில் ஒருவரே கிண்ணம் வெல்வார் என்ற கருத்துக்கணிப்பு நிலவி வந்தது. இந்த நிலையில் குறித்த அபிப்பிராயங்களுக்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளார் கிவித்தோவா.

அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தொடர்பாக கிவித்தோவா தெரிவித்ததாவது ஆட்டம் தொடங்குவதுக்கு முன்னரே சில ஊடகங்களும் விமர்சகர்களும் ரென்னிஸ் ஆர்வலர்களும் கிண்ணத்தைக் கைப்பற்றுவது செரீனா அல்லது செரபோவா என்று முடிவெடுத்துவிட்டனர். எந்த அடிப்படையில் இந்த முடிவை எடுக்கிறார்கள் அல்லது எதை வைத்து இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர் என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில் ஏனைய வீராங்கனைகளும் மிகவும் திறமையானவர்களே. ஏனைய வீராங்கனைகள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொடர்களை கைப்பற்றவில்லையா? அல்லது செரீனாவும் செரபோவாவும் தோல்வியை எதிர்கொள்ளவில்லையா?நிலைமை இவ்வாறிருக்க ஏனைய வீராங்கனைகளை சோர்வடையச் செய்யும் விதமாக இவ்வாறான கருத்துக்கள் பரப்பப்படுவது ஏன்? இது முட்டாள்தனம் என்றார். (ம)



## கிர்ஜியோஸுக்கு 24 லட்சம் அபராதம்

கனடாவின் மொன்றியேல் நகரில் நடைபெற்றுவரும் மொன்றியேல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் வாவ்ரிங்காவுக்கு எதிராக தவறான வார்தைப்பிரயோகம் மேற் கொண்ட ஆஸ்திரேலியாவின் கிர்ஜியோஸிற்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 24 லட்சம் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

குறித்த ஆட்டத்தில் காயம் காரணமாக வாவ்ரிங்கா பாதியிலேயே வெளியேறியபோது, அவருடைய தோழி டோனா வெகிச்சையும், மற்றொரு ரென்னிஸ் வீரரான தனாஸியையும் இணைத்து தவறாக பேசினார் கிர்ஜியோஸ். இதனால் கடும் கோபமடைந்த வாவ்ரிங்கா, கிர்ஜியோஸ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்திடம் வலியுறுத்தினார். மைதானத்தில் கிர்ஜியோர் வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டமை உறுதியானதால் கிர்ஜியோஸிற்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. தவிர அவர் மீது விசாரணை நடத்தவும் சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில் 24 07 1981

நோயின் பிடியில் 16 08 2015

### சந்திரலிங்கம் சுதர்சன்

காற்றோடு ஒரு செய்தி காதோரம் வீழ
கறுப்பாக எம்வாழ்வு கனவாகிப் போச்சு
நேற்று வரை எம்மோடு நிஜமாகி நின்று
நெடுதூரம் நீ சென்ற வழிதேடி நொந்தோம்
போற்றர்த தெய்வங்கள் புவிமீது உண்டோ ?
பொலிவோடு நோய் நீங்கி வருவாய் நீ என்று
தேற்ற ஒரு மொழியில்லை தேம்பும் மனதிற்கு
தெய்வகதி நீ காண வேண்டுகிறோம் கூடி.

***முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்.***
***யாழ்ப்பாண சேவை நிலையம்***
***Dialog axiata PLC***

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா மனோன்மணி



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பள்ளம்புலம், சரவணை கிழக்கை வாழ்விடமாகவும் தற்போது இலக்கம் 16/25, சிவன்வீதி, திருநெல்வேலியை (பரமேஸ்வராச்சந்தி) தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா மனோன்மணி நேற்று (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.16/25, சிவன் வீதி ,**
**திருநெல்வேலி.**

தகவல்;
சு. தம்பிரான்(மருமகன்) 077 559 0312
தி. அருள் (மகன்) (ஸ்ரீகந்தராசா)
077 8962024

ATMC AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE
Jaffna Campus

நேர்மையான......
செலவு குறைந்த.....
பாதுகாப்பான வழியில்......

அவுஸ்திரேலியா செல்வதற்கு
அழையுங்கள்:- 077 933 93 53
■ O/L 5 பாடச் சித்தியுடன் - யாழ் மண்ணில் 1 வருடம் படித்துவிட்டு செல்லலாம்.
■ A/L 3 பாட. சித்தியுடன் - யாழ் மண்ணில் 6 மாதங்கள் படித்துவிட்டு செல்லலாம்.
■ ... நேரடியாக செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.